உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 27 புதன்கிழமை (11-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:196

# வடக்கு – கிழக்குக்கான நிதியை அங்கேயே செலவிட வேண்டும்

## அதை உறுதி செய்யவேண்டும் என அரசுக்கு உதவும் நாடுகள் பணிப்பு

- டோக்கியோவிலிருந்து என்.வித்தியாதரன் -

டோக்கியோ,ஜூன்11

**வடக்கு, கிழக்கு புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கு என்று உதவப்படும் பணம் வடக்கு, கிழக்கிலேயே அந்தப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இதை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று டோக்கியோ மாநாடு அரசைப் பணித்திருக்கிறது. நேற்று மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இது சேர்க்கப்பட்டிருக்கிறது.**

**மனித உரிமைகள், ஜனநாயகம், சட்ட ஆட்சி ஆகியவற்றின் அடிப்படையில் பிரச்சினைக்கு நியாயமான நிலையான தீர்வைக் காண்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் (அரசு - புலிகள்) விரைந்து செல்ல வேண்டும் என்றும் மாநாடு வற்புறுத்தியிருக்கிறது.**

தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு குறித்து இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கூடிய விரைவில் பேச்சுக்களில் ஈடுபட டோக்கியோ மாநாடு ஊக்கமளிக்கும் ஒஸ்லோவில் இரு தரப்பினராலும் இணங்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பான சமாதான நடைமுறைகளில் குறிப்பிடத்தக்கதும் சமாந்தரமானதுமான முன்னேற்றத்துடன் உதவி வழங்கும் நாடுகளின் உதவிகள் நெருக்கமாக இணைக்கப்பட வேண்டும் என்றும் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)



ரோக்கியோ மாநாட்டின் முடிவில் அதில் கலந்துகொண்ட உலகத் தலைவர்கள் நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படம்.

## வடக்கு – கிழக்கிற்கான பணம் இன்னும் முடிவாகவில்லை

### ஜப்பான் விசேட தூதுவர் அகாஷி கூறுகிறார்

டோக்கியோ,ஜூன்11

உதவும் நாடுகள் இலங்கைக்கு வழங்கும் பணத்தில் வடக்கு - கிழக்கிற்கு எவ்வளவு என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்ற தகவலை வெளியிட்டார் ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி.

இலங்கைக்கு வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ள நாற்பத்தையாயிரம் கோடி ரூபாவில் உதவு தொகை எவ்வளவு, இலகுவட்டி அடிப்படையிலான கடன்தொகை எவ்வளவு என்று ஜப்பானின் விசேட தூது

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் சோதனையிட முயன்றபோது 'சயனைட்' உட்கொண்டார் இளைஞர்

### வெள்ளவத்தை பாலத்தடியில் சம்பவம்

வெள்ளவத்தையில் இரண்டு இளைஞர்களை பொலீஸார் சோதனையிட முயன்ற போது, இருவரில் ஒருவர் 'சயனைட்' உட்கொண்டுவிட்டார். அவர் கொழும்பு தெற்கு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். மற்றையவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. இது பற்றித் தெரிய வருவதாவது:-

நேற்று மாலை வெள்ளவத்தைப் பாலத்தடியில் உள்ள பொலீஸ் சோதனை நிலையத்தில் கடமையிலிருந்த பொலீஸார் அப்பகுதியால் வந்த ஒட்டோ ஒன்றை மறித்துச் சோதனையிட முயன்றனர். அப்போது ஓட்டோவிலிருந்த இரண்டு இளைஞர்களில் ஒருவர் திடீரென 'சயனைட்' உட்கொண்டுவிட்டார். அவர் உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். மற்றையவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்படும் போது இளைஞர்களிடம் 9 மில்லி மீற்றர் துப்பாக்கி இருந்ததாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் குற்றத்தடுப்புப் பிரிவினரே மேற்கொண்டு வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சயனைட் உட்கொண்ட இளைஞன் உயிரிழந்ததாக கூறப்பட்ட போதும் அதை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (ஐ-3)

## வவுனியாவில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

வவுனியா,ஜூன்11

வவுனியாவில் மகாறம்பைக் குளம் பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தரகுத் தொழில் புரிபவரான மணியம் என அழைக்கப்படும் சிவசுப்பிரமணியம் (வயது 32) என்பவரே இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## டோக்கியோ மாநாட்டில் நோர்வேயின் புதிய நிலை!

டோக்கியோவில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் நோர்வே, அனுசரணையாளர் என்ற நிலையில் நோர்வே கலந்துகொள்ளவில்லை. உதவி வழங்கும் நாடுகளில் ஒன்று என்ற வகையிலேயே கலந்துகொண்டது.

மாநாட்டில் புலிகள் பங்குபற்றாத காரணத்தாலேயே நோர்வே இப்படி நடந்துகொண்டது.

செய்தியாளர்கள் மாநாட்டில் நோர்

(12ஆம் பக்கம் பார்க்க)

### டாக்டர்களின் போராட்டத்தினால்

## யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று மருத்துவ சேவைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்11

அரச மருத்துவர்களின் வேலை நிறுத்தம் காரணமாக யாழ். போதனா மருத்துவமனையில் மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டன.

நாடு முழுவதும் டாக்டர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.வைத்தியசாலை டாக்டர்களும் போராட்டத்தில் குதித்தனர்.

இப்போராட்டம் காரணமாக வைத்தியசாலைச் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

அவசர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகள் செயலிழந்தன. வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகள் செயற்படாததால

(11ஆம் பக்கம் பார்க்க)

## அனைவரும் துணிச்சலுடன் செயற்பட்டு பேச்சுமூலம் அமைதித் தீர்வு காணுங்கள்

### இதுவே மாநாட்டுச் செய்தி என்கிறார் ஆர்மிடேஜ்

டோக்கியோ,ஜூன்11

விடுதலைப் புலிகள் பேச்சு மேசைக்கு திரும்பவேண்டும். ஜனாதிபதி, பிரதமர், அரசதரப்பினர், புலிகள் அனைவரும் துணிவுடன் முடிவுகளை எடுத்துச் செயற்படவேண்டும். பேச்சு மூலம் அமைதித்தீர்வு காணவேண்டும். இதுவே டோக்கியோ மாநாட்டுச் செய்தி என்று அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சார்ட் ஆர்மிடேஜ் மாநாட்டு முடிவில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது கூறினார்.

"டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தை ஜப்பான் நடத்தக்கூடாது என்று புலிகள் 'பிளாக்மெயில்' (மிரட்டல்) செய்தார்கள். அந்த மிரட்டலுக்கு இடம்கொடுக்காமல் உறுதியோடு மாநாட்டை ஜப்பான் நடத்தி முடித்திருக்கின்றது. அதற்காக ஜப்பானுக்கு நன்றி கூறுகின்றோம்." என்றும் ஆர்மிடேஜ் கூறினார்.

நேற்று டோக்கியோ உதவி வழங்கும் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பிலும் அதற்கு முன்னர் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் இறுதி அமர்விலும் அவர் தெரிவித்த மற்றும் தகவல்கள் வருமாறு:-

டோக்கியோ கூட்டத்தில் தாங்கள் பங்குபற்றப் போவதில்லை என்று தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. அலுவலகம் கிரனேட் வீச்சில் சேதம்

திருகோணமலை,ஜூன்11

திருகோணமலையில் உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பியின் அலுவலகம் மீது நேற்றிரவு

(12ஆம் பக்கம் பார்க்க)

தேசிய சேமிப்பு வங்கி வழங்கும்
வீடமைப்புக் கடன்

- 12%, 13%, 14% கவர்ச்சியான வருடாந்த வட்டி.
- 30 ஆண்டுகள் நீடித்த கடன் மீள் செலுத்தும் காலம்.
- கடனை திரும்பச் செலுத்துவதற்கான ஆகக்கூடிய வயது 65 ஆகும்.
- கடன் தொகைக்கான உச்சவரம்பு எதுவுமில்லை.
- தலைமையகத்தில், 4 நாட்களில் கடன்களைப் பெறும் "துரித சேவை" வசதி

எனது வீடு கட்டும் கனவு நனவாகியது

NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

மேலதிக தகவல்கள் 075-332439 அல்லது அண்மையிலுள்ள கிளை முகாமையாளரிடம் பெறலாம்.

PHOENIX O&M

# டோக்கியோவில் இவ்வளவு உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கவே இல்லை என்கிறார் பிரதமர் ரணில்

டோக்கியோ,ஜூன்11

இலங்கையின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குக் கிடைக்கும் வளங்கள் இலங்கையை மீளப்பெறல் திட்டத்துக்கும் வடக்கு கிழக்கையும் அதன அயலில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் புனரமைக்கவும் செலவிடப்படும். எங்களுக்குள் மிக உச்ச சாதகமான மனப்போக்கைக் கொண்டவர்கள் கூட இத்துணை மிகப்பெரிய உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இதை நான் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

- இவ்வாறு கூறினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

டோக்கியோ மாநாட்டில் நிறைவுரை ஆற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவரது நிறைவுரையின் முழு விவரம் வருமாறு:-

இலங்கையின் புனரமைப்பு, அபிவிருத்தி தொடர்பான பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு சற்று முன்னர் நீங்கள் ஆற்றிய செயலானது எங்கள் அனைவரையும் பொறுத்தவரை சரித்திர முக்கியத்துவம் மிக்கதாகும்.

அது ஓர் அத்தியாயத்தின் முடிவையும் மற்றொரு அத்தியாயத்தின் ஆரம்பத்தையும் குறிக்கிறது.

சமாதானம், முன்னேற்றம், அபிவிருத்தி ஆகியவை நிறைந்த எதிர்காலத்தை இலங்கை அரசினரும் மக்களும் எதிர்பார்த்துள்ளனர்.

சமாதானம் என்ற பிரகாசமான இலக்கை அடைவதற்கான எமது பயணத்தில் நீங்கள் அனைவரும் எமது பங்காளிகள். அந்த நோக்கத்தை எட்டுவதற்காக நீங்கள் உங்களின் நேரம், சிரத்தை, முயற்சி ஆகியவற்றைப் பெரிய அளவில் வழங்கியுள்ளீர்கள்.

டோக்கியோவில் கடந்த இரண்டு நாள்களாக நீங்கள் தெளிவாக வெளிப்படுத்திய கூட்டுணர்வு, நட்பு ஆகியவற்றுக்கு எனது அடிமனதிலிருந்து நான் நன்றி தெரிவிக்கும் போது அது எமது மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிப்பதாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

இந்த மாநாட்டில் எல்லாப் பிரதிநிதிகளும் தெரிவித்த கருத்துக்கள் ஒரே விடயத்தையே மையப் பொருளாகக் கொண்டிருந்தன. அது இலங்கையில் சமாதானம் பற்றியது. சவால்கள் கடுமையானவையாக இருந்தாலும் அவற்றில் வெற்றியீட்டுவதற்கான உறுதி தெளிவாகத் தென்படுகின்றது.

இந்த மாநாட்டின் ஆதரவாளர்களான ஜப்பான், மாநாட்டின் இணைத் தலைவர்கள், மாநாட்டில் பங்குபற்றிய 51 நாடுகள், 21 சர்வதேச நிறுவனங்கள் போன்றவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகிய - ஜப்பான் அரசின் அழைப்பை ஏற்று இங்கு வந்த - உங்கள் அனைவருக்கும் எனது நாட்டுக்காகவும் எனது மக்களுக்காகவும் சளைப்பின்றி நீங்கள் ஆற்றிய முயற்சியை நான் தனிப்பட்ட முறையில் ஆழமாகவும் நேர்மையாகவும் விதந்துரைக்க விரும்புகின்றேன்.

எமது சவால் மிகுந்த இந்தப் பயணம் தொடர்பாக இந்த இரண்டு நாள்களிலும் உங்கள் கணிப்பீடுகள், அவதானங்கள் மூலம் நீங்கள் தெரிவித்த செய்தி தெளிவானது; வலுவானது.

நீங்கள் இங்கு செய்த பிரகடனம் நாம் தற்போது ஒன்று சேர்ந்து பயணிக்கும் பாதையில் ஒரு வழிகாட்டி சமிக்ஞை.

முதலாவதாக ஒஸ்லோவில் தீர்மானிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக நடவடிக்கைகளை மீளத் தொடங்கவும் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கவும் ஒவ்வொரு முயற்சியையும் நாம் எடுக்க வேண்டியுள்ளது.

டோக்கியோவில் இன்று மேற்கொள்ளப்பட்ட பிரகடனம் புதிய கட்டமைப்பைத் தந்துள்ளது. அது இலங்கையின் சமாதானம் மற்றும் அபிவிருத்தியை மீள வலுப்படுத்தும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

இரண்டாவதாக, இலங்கை அதன அதிகார வர்க்க முறையை அதனால் ஏற்படும் தாமதங்கள், தடைகளைத் தாண்டி பணிகள் திறமையாகவும் பயனதரத்தக்கவையாகவும் வேகமாக நடைமுறைப்படுத்தக் கூடிய வகையுடையதாக மாற்ற வேண்டும். இதற்குக் குறிப்பிடத்தக்க அரசியல் தீர்மானங்கள் அவசியமாகின்றன. இந்தப் பெறுபேறை அடைவதற்குத் தேவையான தலைமையை வழங்க நான் தீர்மானித்திருக்கின்றேன்.

மூன்றாவதாக, சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் இடையில் பின்னிப் பிணைந்த தொடர்பு உள்ளது.

நான்காவதாக, இலங்கை சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச ஆதரவு உள்ளது.

நேற்று எனது ஆரம்ப உரையில் நான் குறிப்பிட்டது போன்று, இங்கு டோக்கியோவில் எங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாதமை கவலைக்குரியது.

அவர்கள் இங்கு இருந்திருந்தால் அவர்களின் கருத்துக்களும் செவிமடுக்கப்பட்டிருக்கும்; இந்தச் செய்திகளால் அவர்களும் உற்சாகமூட்டப்பட்டிருப்பார்கள்; இந்த நிகழ்வின் வெற்றியை அவர்களும் பகிர்ந்துகொண்டிருப்பார்கள்.

புலிகளை மீண்டும் பேச்சு மேசைக்கு கொண்டுவரும் எமது முயற்சி தொடரும்.

உங்களில் பலரின் அளப்பரிய சேவையின் உதவியோடு நடந்து முடிந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க பெறுபேறுகள் எட்டப்பட்டுள்ளன.

✪ யுத்தநிறுத்தம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

✪ சமாதான நடவடிக்கைகளில் தங்களின் உறுதியையும் நேர்மையையும் புலிகள் மீள வலியுறுத்தியுள்ளனர்.

✪ அந்த நடவடிக்கைகள் தொடர்வதோடு பல மட்டங்களில் தொடர்புகள் பேணப்படுகின்றன.

இந்த மாநாட்டின் ஊடகச் செய்தி பேச்சுக்களை மீள ஆரம்பிக்க உதவியாக உள்ளது.

இது விரைவில் நிகழும் என்ற உங்களின் நம்பிக்கையானது -

தேவை மதிப்பீட்டு அறிக்கை மற்றும் எங்களின் 'இலங்கையை மீளப்பெறல்' பற்றிய புத்திநோக்கு ஆகியவை தொடர்பான உங்களின் சாதகமான பதிலில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

உங்களின் உதவி பற்றிய விவரங்கள் தாமாகவே கருத்தை வெளிப்படுத்துகின்றன.

நான்கு வருட காலத்துக்கு முழு இலங்கையின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கு வழங்கப்படும் மொத்த உதவி 450 கோடி அமெரிக்க டொலருக்கு அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. கிடைக்கும் வளங்கள் 'இலங்கையை மீளப்பெறல்' திட்டத்துக்கும் வடக்கு, கிழக்கையும் அதன் அயலில் உள்ள ஐந்து மாவட்டங்களை யும் புனரமைக்கவும் செலவிடப்படும்.

எங்களுக்குள் மிக உச்ச சாதகமான மனப் போக்கைக் கொண்டவர்கள் கூட இத்துணை மிகப்பெரிய உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கவில்லை என்பதை நான் இங்கு ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

இந்த உதவிகள், அனைத்து மக்களும் சமாதானம், பாதுகாப்பு, கௌரவத்துடன் வாழக்கூடிய அமைதியான இலங்கை என்ற இலக்கை எய்துவதற்கான அத்திபாரத்தை அமைக்க உதவவுள்ளன.

உங்களின் உற்சாகமூட்டலாலும் செயலூக்கம்மிக்க பங்களிப்பினாலும் அதை எங்களால் நிகழ்த்திக் காட்ட முடியும்.

நிரந்தர சமாதானம் இன்னும் சாத்தியமாகாதநிலையிலும் கூட இலங்கைக்கு சர்வதேச சமூகம் உதவி வழங்கும் தனித்துவமான நிலைமை குறித்து நான் நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன்.

பதினைந்து மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட யுத்தநிறுத்தம் தொடக்கம் சர்வதேச சமூகம், முன்னேறுவதற்கான எமது திறமையின் மீது - பொதுவானதாக அமையாத ஒரு நம்பிக்கையை வெளிப்படுத்தி - அதற்கான வளங்களை வழங்கி, எமக்கு ஆதரவு தந்துள்ளது. ஒஸ்லோ (மாநாடு) அத்தகைய ஒரு நிகழ்வாகும்.

இன்று டோக்கியோவில் ஆதரவு மற்றும் உற்சாகமூட்டலுக்கான ஆச்சரியப்படத்தக்க கூட்டு உறுதி மட்டுமல்லாமல், எங்கள் இலக்கை வெற்றிகரமாக நாங்கள் அடைந்தால் மேலும் ஆதரவு தருவதற்கான உறுதியும் எமக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

உங்களின் உதவியுடன் எங்கள் பிணக்குக்கு அமைதித் தீர்வு காணும் எமது தீர்மானத்துடன் எம்மைப் போன்ற நிலையில் உள்ள ஏனையோருக்கு வெற்றிகரமான ஒரு முன்மாதிரியாக நாம் வர முடியும்.

உங்களில் பலர் உங்களது உதவிகள் சமாதான நடவடிக்கைகளில் திருப்திகரமான போக்குடன் தொடர்புபட்டிருக்கும் என்பதை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

நானும் அதை ஆதரிப்பவர்களுள் ஒருவன், அத்தகைய எதிர்பார்ப்பு தங்களிடம் இருப்பதில் நான் ஒரு பிரச்சினையையும் காணவில்லை.

உண்மையில், நான் அதற்கு மேலும் போய் நாங்கள் பெற்றுச் செலவிடும் உதவிகளில் இயன்றளவு வெளிப்படையாக இருப்பதையே விரும்புகின்றோம் என்பதைக் கூறுகின்றேன்.

அத்தோடு, பொறுப்பு (கணக்குக்) கூறுவதற்கு நாங்கள் இன்னும் என்ன செய்யவேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதைக் கூறுமாறு உளப்பூர்வமாக உங்களை வேண்டுகின்றேன்.

எங்கள் சிவில் சமூகமும் கூட - நேற்று உங்களுக்கு வலியுறுத்தப்பட்டது போல - நாங்கள் முன்நகரும் போது அதில் முற்றாகப் பங்குபற்றுவதற்கு அழைத்து வரப்படவேண்டும்.

கடைசியாக, இலங்கையின் தனித்துவமான - சரித்திர முக்கியத்துவம் மிக்க - இந்த நிகழ்ச்சியை சாத்தியமாக்கி உங்கள் அனைவருக்கும் நன்றி கூற விரும்புகின்றேன்.

ஜப்பான் பிரதமர் யுனிச்சிரோ கொய்சுமி, ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யொரிக்கொ கவகுச்சி அம்மையார் ஆகியோரின் தனிப்பட்ட ஆதரவும் ஒத்துழைப்பும் சிறப்பானவை.

தூதுவர் அகாஷி தனிப்பட்ட முறையில் எனக்குத் தாங்கு தூணாகவும் ஒவ்வொரு திருப்பத்திலும் எங்களுக்கு உதவுபவராகவும் திகழ்ந்தார்.

டோக்கியோ பிரகடனமும் அது தொடர்பான தொடர் நடவடிக்கைகளும் பிரதமர் கொய்சுமியின் சமாதான அவாவுக்கான வெற்றியின் குறியீட்டு வெளிப்பாடாக அமையும் என எதிர்பார்க்கிறேன்.

அனுசரணையாளர்களான நோர்வே, இணைத் தலைமைகள் மற்றும் இங்கு பிரசன்னமாகியுள்ள பிரதிநிதிகள் ஆகிய அனைத்துத் தரப்பினரதும் பணிகள் ஆதரவு வழங்கும் விடயத்தில் மிகச் சிறப்பானவை.

நாளை எங்களது உண்மையான வேலை ஆரம்பிக்கின்றது.

இலங்கை அரசு மற்றும் மக்களின் சார்பில் உங்கள் அனைவருக்கும் உங்களது நல்வாழ்த்துக்கள் மற்றும் ஊக்குவிப்புக்காக எனது மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'போமஸ்துதி' - சிங்களத்தில்

'நன்றி' - தமிழில்.

டோமோ அரிகட்டோ கொஸைமஸ்டா - எங்கள் அனைவருக்கும் தெரிந்த மொழியில்

- என்று கூறினார் பிரதமர்.

# இலங்கை மக்களின் கடன் சுமை மேலும் 22ஆயிரம் ரூபாவால் உயர்வு

## ஜப்பான் மாநாடு குறித்து சரத் அமுனுகம

"ஜப்பானில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் இலங்கைக்கு கிடைத்திருக்கும் கடன்கள் இலங்கைப் பிரஜை ஒவ்வொருவரையும் மேலும் 22ஆயிரம் ரூபாவுக்கு கடனாளியாக்கியுள்ளது".

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக் காலத்தில் இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவரையும் சராசரி 77 ஆயிரம் ரூபாவுக்கு கடனாளியாக்கிவிட்டது என்று, கூச்சலிட்டவர்கள் இன்று ஜப்பானில் கையேந்தி நிற்கின்றனர்.

ஜப்பானில் மாத்திரம் இவர்கள் பெற்றுள்ள கடனுதவி காரணமாக இலங்கைப் பிரஜை ஒவ்வொருவரினதும் கடன் சுமை 22 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது. உதவிகளில் 90 சதவீதமானவை வட்டியுடன் செலுத்த வேண்டிய கடன்களாகும் என்றும் சரத் அமுனுகம தெரிவித்தார்.

# நீர்கொழும்பில் தப்பியோட முயன்ற கைதி துப்பாக்கிச் சூட்டில் பலி! மற்றொருவர் காயம்!!

## வேறு இரு கைதிகள் மதிலேறி தப்பியோட்டம்

கொழும்பு,ஜூன்11

நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட கைதியொருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இவருடன் தப்பிச்செல்ல முற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இரு கைதிகள் தப்பியோடிவிட்டனர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் நேற்று அதிகாலை நான்கு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு கைதிகள் அதிகாலை நான்கு மணியளவில் சிறைச்சாலை மதிலில் ஏறி தப்பிச் செல்ல எத்தனித்துள்ளனர்.

காவற் கடமையில் ஈடுபட்டிருந்த சிறைச்சாலை காவலர்கள், தப்பிச் செல்லவேண்டாம் என எச்சரித்த போதும் அவர்கள் தப்பிச் செல்ல முற்பட்டனர்.

உடனே சிறைச்சாலை காவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் காயங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்; இருவர் தப்பியோடிவிட்டனர்.

தப்பிச் சென்றவர்களைத் தேடி பொலீஸார் வலை விரித்துள்ளனர்.

# புலிகளைச் சந்திக்க அகாஷி இன்று இலங்கை வருகிறார்

டோக்கியோ,ஜூன்11

டோக்கியோவில் நேற்று முடிவடைந்த இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தின் பெறுபேறுகளை விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கும்படி அக்கூட்டத்தை நடத்திய ஜப்பான் நாடு கோரப்பட்டிருக்கின்றது.

அக்கூட்டத்தின் முடிவில் விடுக்கப்பட்ட டோக்கியோ பிரகடனத்தில் இக்கோரிக்கை அடங்கியுள்ளது.

கூட்டத்தின் பெறுபேறுகள் அடங்கிய பதிவுகளை எடுத்துக்கொண்டு கொழும்புக்கான ஜப்பானியத் தூதுவர் இன்று புதன்கிழமை டோக்கியோவிலிருந்து கொழும்புக்குப் புறப்படுகின்றார் கொழும்பிலிருந்து இயன்ற விரைவில் அவர் கிளிநொச்சி சென்று புலிகளின் தலைமையகத்திடம் அவற்றைக் கையளித்து, டோக்கியோ கூட்டம் குறித்து புலிகளின் தலைவர்களுக்கு விளக்குவார் என ஜப்பானிய அரசின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேற்றுக் காலை செய்தியாளர் மகாநாட்டில் அறிவித்தார்.

அதேவேளை, தாம் லண்டனுக்குச் சென்று அங்கு புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து டோக்கியோ கூட்டப் பெறுபேறுகளை அவருக்கு நேரில் விளக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் அகாஷி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# தீவுப் பகுதி சேவையில் அவசர முதலுதவிப் படகு

யாழ்ப்பாணம்,ஜூன்11.

தீவுப்பகுதியில் ஏற்படும் அவசர வைத்திய தேவைகளின் போது பயன்படுத்தவென 'சமுத்திர தீபம்' என்னும் பெயரில் முதலுதவிப் படகு ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐநா. தூதரகத்தின் (யு.என்.எச்.சி.ஆர்) நிதியுதவியுடன் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மேற்பார்வையினால் வடிவமைக்கப்பட்ட இந்தப் படகின் கட்டுமானப் பணியை யாழ்.ஜி.குறூப் நிறுவனத்தினர் பூர்த்தி செய்துள்ளனர்.

இந்த முதலுதவிப் படகின் நிர்மாண வேலைகளின் பூர்த்தி விழாவும் இறைவழிபாட்டு நிகழ்வும் இன்று காலை 6 மணி முதல் யாழ்.கே.கே.எஸ். வீதியில் உள்ள ஜி.குறூப் நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.


தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் திருமதி பதிலகநாயகம், திட்டப் பணிப்பாளர் புசுந்தரம்பிள்ளை மற்றும் செயலக அதிகாரிகள், ஐநா தூதரகத்தின் (யு.என்.எச்.சி.ஆர்) அதிகாரிகள், யாழ்பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர்.

குடாநாட்டின் சகல தீவுப் பகுதிகளிலும் அவசர வைத்திய சேவை தேவைப்படும் வேளைகளில் அங்கிருந்து நோயாளிகளை விரைவில் முதலுதவி சிகிச்சையுடன் யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிகளுக்கு அழைத்து வரும் சேவையில் இந்த 'சமுத்திர தீபம்' முதலுதவிப்படகு பயன்படுத்தப்படும் என்றும் -

இந்தப்படகில் சகல வகையான முதலுதவி மருத்துவ உபகரணங்கள் மற்றும் நோயாளர்களுக்குரிய சகல வசதிகள் பொருத்தப்பட்டிருக்கும். அவசர, வைத்திய சேவைகளை வழங்குவதற்கென வைத்தியர், தாதியர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பர் என்றும் -

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தெரிவித்தார்.(ஜ.எ)

# ஆஸ்துமாவுக்கு 'மீன் மருந்து'!



ஹைதராபாத்,ஜூன்11

இந்தியாவின் ஆந்திரா மாநிலம் ஹைதராபாத்தில் ஆஸ்துமா நோய்க்கு வழங்கப்படும் 'மீன் மருந்து' பிரபலமானது. சிகிச்சை நிலயத்துக்கு வெளியே விற்கப்படும் சிறிய உயிருள்ள மீனை வாங்கிச் செல்லும் நோயாளிக்கு, அந்த மீனின் வாய்க்குள் மருந்தைத் திணித்து அப்படியே விழுங்க வைப்பார்கள். ஒரு வருடத்தில் குறிப்பிட்ட நாளில் மட்டுமே இந்த சிகிச்சை வழங்கப்படுகிறது. இந்த 'மீன் மருந்து' குறித்து பலவித விமர்சனங்கள் எழுகின்ற போதிலும், ஆண்டு தோறும் வெளிநாடுகளில் இருந்து கூட இந்த மருந்துக்காக பலர் வருகின்றனர்.கடந்த திங்கட்கிழமை மீன் மருந்தை சிறுவன் ஒருவனுக்கு வழங்குவதை அருகில் உள்ள படத்தில் காணலாம்.

# இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் காஸாவில் தீவிரத் தாக்குதல்!

காஸா,ஜூன்11

காஸாவில் உள்ள இஸ்ரேலிய சோதனைச் சாவடி மீது பலஸ்தீனப் போராளிகள் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் நேற்று காஸாப் பள்ளத தாக்கில் கடுமையான ரொக்கெட் வீச்சுக்களை நடத்தின.

இந்தத் தாக்குதல்களில் இரண்டு பலஸ்தீன போராளிகள் உயிரிழந்தனர் என்றும், போராளிக்குழு ஒன்றின் தளபதி ஒருவர் உட்பட 12 பேர் காயம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், மீண்டும் இஸ்ரேலிய - பலஸ்தீன மோதல்கள் வெடித்துள்ளன என்று இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீனத் தீவிரவாத இயக்கமான ஹமாஸின் முக்கிய தளபதிகளில் ஒருவரான அப்துல் அஸீஸ் அல் ரண்டிஸி என்பவரே இஸ்ரேலிய ஹெலித் தாக்குதலில் காயமடைந்த பலஸ்தீன முக்கியஸ்தர் ஆவார்.

நகரின் பிரதான வீதி வழியாக அவர் 'ஜீப்'பில் சென்று கொண்டிருந்ததாகவும் -

அப்போது இஸ்ரேலிய ஹெலி ஒன்றிலிருந்து ஏவப்பட்ட ரொக்கெட் அந்த ஜீப்பைத் தாக்கியதாகவும் -

ஆயினும் காலில் ஏற்பட்ட காயத்துடன் அல் ரண்டிஸி உயிர்தப்பி விட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இத்தாக்குதலுக்கு இலக்காகி 43 வயதான பெண்மணி ஒருவரும், அவரது 8 வயது மகளும் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் காயமடைந்தனர். காஸாவில் உள்ள ஷெய்பா மருத்துவமனை மருத்துவர்கள் இதனை தெரிவித்தனர்.

காஸாவில் நடத்திய தாக்குதல்களுக்கு பழிவாங்கும் முகமாக இத்தாக்குதல் நடத்தப்பட்டிருந்தாலும் இது மத்திய கிழக்கு சமாதானத்திட்டத்தை குழப்பும் ஒரு செயல் என வர்ணிக்கப்படுகிறது.

பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸ் அமெரிக்க ஜனாதிபதி புஷ் முன்னிலையில் இஸ்ரேலியப் பிரதமருக்கு பலஸ்தீனப் போராளிகளைக் கட்டுப்படுத்துவதாக உறுதி அளித்திருந்தார். ஆனால், பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேலியப் படையினர் மீது தாக்குதலை நடத்தியிருந்தனர். இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த பலஸ்தீனப் பிரதமர் போராளி குழுக்கள் ஒடுக்கப்படும் என்று மீண்டும் உறுதி அளித்த பின்பும் இஸ்ரேலிய ஹெலிகள் தாக்குதலை நடத்தியுள்ளன.

இஸ்ரேலியப் படையினர் நேற்று காஸாவில் தாக்குதல் நடத்தியது பலஸ்தீனத்துடனான சமாதான முயற்சிகளைக் குழப்பும் ஒரு செயல் என அறிவிக்கப்பட்டதற்கான அறிகுறி என்றும் கூறப்படுகிறது.

இஸ்ரேல் காஸாப் பகுதியில் போராளிக் குழுக்களை இலக்கு வைத்து தாக்கியதை அடுத்து இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் - பலஸ்தீனப் போராளிகள் இவ்வாறு தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதற்கு கண்டனம் தெரிவித்த அமெரிக்கா சமாதான முயற்சிகள் குழம்பக்கூடாது என்பதில் இரு தரப்பும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுள்ளது. (ஒ)



ஹமாஸ் தளபதியின் ஜீப் இஸ்ரேலியத் தாக்குதலில் எரியும் காட்சி.

# இந்தியாவில் அமெ.ராணுவத்தளம்: அடியோடு மறுக்கிறார் அமைச்சர்

ஜம்மு,ஜூன்11

இந்தியாவில், அமெரிக்க இராணுவம், தளம் அமைக்கப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது முழுக்க முழுக்க தவறான தகவல் ஆகும்.

- இவ்வாறு தெரிவித்தார் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்.

அமெரிக்கர்கள் எதை எல்லாம் விரும்புகிறார்களோ, அதையெல்லாம் அப்படியே நம்ப அவர்களுக்கு உரிமை உள்ளது. ஆனால், அவர்கள் இந்தியாவில் இராணுவத் தளம் அமைக்க இந்தியா அனுமதிக்காது. அமெரிக்கா மட்டுமன்றி எந்த நாடும் இந்தியாவில் தளம் அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

இந்தியாவில் இராணுவத் தளங்களை அமைக்கும் உரிமை இந்தியருக்கு மட்டுமே உண்டு. அதை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுப்பதில்லை என்ற கொள்கை முடிவில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

- இவ்வாறு பெர்னாண்டஸ் மேலும் கூறினார்.

# ஈராக்கில் கடந்த 5 நாள்களில் அமெ.படையினர் மூவர் கொலை!

பக்தாத்,ஜூன்11

ஈராக்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த 5 நாள்களில் ஈராக்கில் கொல்லப்பட்ட மூன்றாவது அமெரிக்கப் படை வீரர் இவராவார்.

ஈராக்கின் மேற்கே, சிரியாவின் எல்லையருகே உள்ள அல் குவாசிம் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

சோதனைச் சாவடி ஒன்றினருகே கார் ஒன்று வந்து நின்றதாகவும் -

அதிலிருந்தவர்கள், காரில் உள்ள நோயாளிக்கு உதவும்படி சோதனைச் சாவடியில் நின்ற அமெரிக்கப் படையினரை அழைத்ததாகவும் -

அதனை நம்பிக் காரை நெருங்கிய அமெரிக்கச் சிப்பாயை காரில் இருந்தவர்கள் சுட்டுக் கொன்றதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

தமது சகா கொல்லப்பட்டதும் சுதாகரித்துக் கொண்ட அமெரிக்க வீரர்கள் பதில் தாக்குதல் நடத்தி ஒருவரைக் கொன்றனர். மற்றொருவரை கைதுசெய்தனர். ஆயினும் காரில் இருந்த வேறொருவர் தப்பிச் சென்றுவிட்டார்.

இதேவேளை, பக்தாத்திலிருந்து மேற்கே 50 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள பலூஜா நகரில் மசூதி ஒன்றுக்குள் இருந்தவர்கள் அவ்வழியே சென்ற அமெரிக்கப் படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஈராக்கில் வெளிநாட்டுப் படையினர் மீதான தாக்குதல்கள் ஏப்ரல் மாதத்தை விட கடந்த மாதம் மும்மடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)



சந்தேகத்தின் பேரில் ஈராக்கியரை சோதனையிடும் அமெரிக்கச் சிப்பாய்.

உலக அரங்கில்

# ஆப்கானில் உள்ள அமெரிக்கர்கள் அந்த நாட்டில் பயணிக்கத் தடை!

வாஷிங்ரன்,ஜூன்11

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள், ஊழியர்கள் அங்கு சுற்றுப் பயணம் எதையும் மேற்கொள்ள வேண்டாம் என்று அமெரிக்கா தடை விதித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள சர்வதேச பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 4 ஜேர்மனிய வீரர்கள் கடந்த சனிக்கிழமை கார் குண்டு வெடிப்பில் இறந்ததையடுத்தே அமெரிக்கா இந்தத் தடையை விதித்துள்ளது.

காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மூலம் அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மிகவும் அத்தியாவசியமான அதிகாரபூர்வப் பணிகள் என்றால் மட்டும் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளலாம் என்றும் -

இல்லையேல் சுற்றுப் பயணங்களை தள்ளி வைக்குமாறும் - கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

காபூலில் உள்ள அமெரிக்கர்களும் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# அசீரிய பேரரசுக்கால புதையல் பக்தாத்தில் பத்திரமாக மீட்பு!

பக்தாத்,ஜூன்11

ஈராக் வங்கிப் பெட்டகம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மிகவும் பழைமையான புதையல் ஒன்று தண்ணீருக்கடியில் இருந்து பத்திரமாக மீட்கப்பட்டுள்ளது. விலை மதிக்க முடியாத தங்க ஆபரணங்கள் , தங்க நாணயங்களைக் கொண்ட இந்தப் புதையல் மிகவும் தொன்மையானது. இது அசீரிய பேரரசுக்கு சொந்தமானது என்று கூறப்படுகிறது.

ஈராக்கின் மிக தொன்மையானது அசீரிய பேரரசு. இந்தப் பேரரசு பல நூற்றாண்டுகளுக்கு முந்தையது. இந்தப் பேரரசுக்குச் சொந்தமான நம்ரத் புதையல் என்ற புகழ்பெற்ற புதையல் விலை மதிக்கமுடியாதது. அதனுள் நூற்றுக்கணக்கான தங்க நகை ஆபரணங்கள் உள்ளன. இந்தப் புதையல பக்தாத் மத்திய வங்கியில் உள்ள பாதுகாப்பு பெட்டகத்தில் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது.

கடந்த மார்ச் மாதம் ஈராக் மீது அமெரிக்கா தாக்குதலை தொடங்கியதை அடுத்து உள்நாட்டுக் கலவரம், கொள்ளை, சூறையாடல் போன்ற சம்பவங்கள் அங்கு நடந்தேறின. அதில் பக்தாத் மத்திய வங்கியும் கொள்ளையர்களால் சூறையாடப்பட்டது.

இந்நிலையில் மத்திய வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்தில் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்தப் புதையலும் கொள்ளையர்களால் சூறையாடப்பட்டிருக்கும் என்று அனைவராலும் கருதப்பட்டது. ஆனால், அவை கொள்ளையடிக்கப்படவில்லை. அந்தப் புதையல் பத்திரமாக உள்ளது என்று ஈராக் மத்திய வங்கியின் முகாமையாளர் கூறியுள்ளார்.

இது குறித்து பக்தாத் மத்திய வங்கி முகாமையாளர் பாலே சல்மான கூறியதாவது:-

இந்த விலை மதிக்க முடியாத நம்ரத் புதையல் 1988-90 ஆம் ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அசீரிய பேரரசின் மாளிகையில் உள்ள அரச சமாதியில் இருந்து எடுக்கப்பட்டது. இது 9 ஆவது நூற்றாண்டைச் சேர்ந்தது. ஈராக் அமெரிக்கப் படைகளின் வசமான பின்னர் இங்கு நடந்த கொள்ளை, சூறையாடல் போன்ற சம்பவங்களில் இந்தப் புதையல் கொள்ளையடிக்கப்பட்டு இருக்கலாம் என்று தான் அனைவரும் கருதினர்.

ஆனால், புதையல் மிகவும் பத்திரமாகப் பாதுகாப்புப் பெட்டகத்தில் இருந்தது. அது களவு போகவில்லை. பாதுகாப்புப் பெட்டகத்தில் புதையல் இருந்த இடம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்திருந்தது. அதிலிருந்து சில மணி நேரங்களில் அந்த அரிய பொக்கிஷம் மீட்கப்பட்டது - என்று அவர் கூறினார்.

புதையலை மீட்க உதவிய அமெரிக்க சுங்க வரித்துறை நிறுவனப் பேச்சாளர் இது குறித்துக் கூறுகையில்:-

இந்தப் புதையலை மீட்க முதன் முதலில் பாதுகாப்பு பெட்டகம் இருந்த இடத்திற்குச் சென்ற போது அங்கு வெள்ளம் சூழ்ந்திருந்தது. அதில் இறந்த உடல்கள் மிதந்தன. இவர்கள் புதையலைச் சூறையாட வந்தவர்கள் என்றே நாம் கருதுகிறோம். அப்போது இரு கோஷ்டிகளுக்கு இடையே நடந்த மோதலில் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கலாம். ஆனால், அந்த மோதல்களில் புதையலுக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

புதையல் இருந்த இடத்தில் எப்படி வெள்ளம் சூழ்ந்தது. ஒரு வேளை ஈராக்கியர்கள் வேண்டுமென்றே பாதுகாப்புப் பெட்டகம் இருந்த அறையில் தண்ணீரை நிரப்பி இருககலாம் அல்லது சதாமுக்கு நெருங்கியவர்கள் இந்த வேலையைச் செய்திருக்கலாம் - என்றார். (ஒ)

# ஆயுதக் களஞ்சியம் வெடித்து ஈராக்கில் 3 பேர் உயிரிழப்பு

பக்தாத்,ஜூன்11

ஈராக்கியப் படையினரின் ஆயுதக் களஞ்சியம் ஒன்று வெடித்துச் சிதறியதில் அங்கு மூன்று அப்பாவிகள் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்று அமெரிக்க மத்திய படைப்பிரிவு அறிவித்துள்ளது.

பக்தாத்தில் இருந்து சுமார் 75 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள திவானியா என்ற நகரில் இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை நடந்தது.

ஆனால், இச்சம்பவம் குறித்து அமெரிக்க மத்திய படைப்பிரிவு செவ்வாய்க்கிழமை அதிகாலைதான் அறிவித்தது.

ஆயுதக் களஞ்சியம் வெடித்ததை அறிந்த அமெரிக்கப் படையினர், அங்கு உடன் விரைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

'இது ஒரு விபத்து, சிறிய தீப்பொறி காரணமாக இது ஏற்பட்டிருக்கலாம்' என்று ஈராக்கிலுள்ள அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# முகத்திரை வழக்கு தள்ளுபடி!

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் முஸ்லிம் மதத்தை சேர்ந்த ஒரு பெண் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு புகைப்படம் எடுத்தார். முகத்தை மூடி 'பர்தா' அணிந்து கண்கள் மட்டும் தெரியும்படி அவர் படம் எடுத்தார். அந்தப் படத்தை தனது விண்ணப்ப மனுவில் ஒட்டினார். ஆனால், முகம் தெரியும்படிதான் படம் எடுக்கவேண்டும் என்று அதிகாரிகள் வற்புறுத்தினார்கள். அந்தப் பெண் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். ஆனால், நீதிமன்றம் அந்தப் பெண்ணின் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது. முகம் தெரியும்படி தான் படம் எடுத்து ஒட்டவேண்டும் என்று நீதிமன்றம் உறுதியாகக் கூறிவிட்டது. (ஒ)

bajaj Caliber 115




அறிமுக விலை
டிஸ்க் பிரேக் வடிவம் ரூ. 83,265/-
ட்ரம் பிரேக் வடிவம் ரூ. 77,304/-
(VAT உள்ளடக்கப்படவில்லை)
ஒவ்வொன்றுக்கும் ஒரு ஜாக்கெட் இலவசம்

## வேகம், கவர்ச்சி, பணச் செலவுகளைப் பொறுத்தளவில் மோட்டார் வண்டி ரகங்களுக்குள்ளே தலை சிறந்தது.

காண்பவர்களை கவர்கின்ற எடுப்பான தோற்றமும், டிரைவிங் வசதிகள், பாதுகாப்புக் கட்டமைப்பும் கொண்ட Caliber 115 மோட்டார் சைக்கிள், வேகம், கவர்ச்சி ஆகியவற்றால் மட்டுமல்ல சிக்கனமான எரிபொருள் பாவனையாலும் பாவனைக்கு உகந்தது.

Caliber 115 கீர்த்தி மிக்க டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்ட் இன் இன்னுமொரு தரமான இறக்குமதியாகும். விற்பனைக்கு பிந்திய சேவை மற்றும் விநியோக வலைபின்னல் சேவைகளும் நாடுமுழவதும் செய்து கொடுக்கப்படும்.

### சில நிகரற்ற தன்மைகள்

- எரிபொருள் சிக்கன K-tec தொழில் நுட்பத்துடன் கூடிய 111.6 cc 4-ஸ்ட்ரோக் என்ஜின்
- லீட்டருக்கு 90 கி. மீட்டர் (கடும் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டது)
- அழகிய ஒப்பனையுடன் ஒப்டோப் ஹேலொஜன் ஹெட்லேம்ப்
- ஒப்டிமம் ரைடிங் இன்டிகேடர் மற்றும் ட்ரிப்மீட்டர்
- எந்நேரமும் குறைந்த எரிபொருளில், கூடிய பலனை உறுதி செய்யும் TRICS முறைமை.
- ஹை பீம் ..ப்ளேஷர்
- ஒரே சாவித் துவாரத்தால் என்ஜினை இயக்குதலும், ஹென்ட்ல் பார் மூடுதலும்
- டிஸ்க்ப்ரேக் மற்றும் ட்ரம்ப்ரேக் வடிவங்களில் பெற்றுக்கொள்ளலாம்

தன்னிகரற்ற உத்தரவாதம்

பஜாஜ் இலங்கையில் முதன்மையாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி: 074-700600 பெக்ஸ்: 074-700677, 687175.
ஹொட்லைன் : 074-715050

பிராந்திய அலுவலகங்கள் : கண்டி, மாத்தறை, அம்பாறை, தெஹியத்தக்கண்டிய, அனுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா.

தன்னம்பிக்கையுடன் சவாரிசெய்யுங்கள் எடுப்பாக ஓட்டிச் செல்லுங்கள்

mel ads 3/62234

உதயன்

# டோக்கியோ மாநாடு உணர்த்தும் இரு விடயங்கள்

டோக்கியோவில் நடைபெற்ற உதவும் நாடுகளின் இரண்டு நாள் மாநாடு முக்கியமாக இரண்டு விடயங்களை சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபடுத்திவிட்டது.

1) சர்வதேச சமூகத்திற்கு இலங்கை மீதுள்ள அக்கறையும் கரிசனையும்.

இரண்டு தசாப்தகால யுத்தத்தால் சீரழிந்து போய்க் கிடக்கும் இந்த நாடு குறிப்பாக வடக்கு, கிழக்கு மறுசீரமைக்கப்பட வேண்டும்; அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

பிரச்சினைக்கு பேச்சுகள் மூலம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

நிலையான சமாதானம் ஏற்படுத்தப்படவேண்டும். இந்த இலக்கை அடைவதற்கு எவ்வளவு நிதி தேவைப்பட்டாலும் அதைத் தந்து உதவ சர்வதேச சமூகம் தயாராக இருக்கின்றது.

2) விடுதலைப் புலிகள் அர்ப்பணிப்புடன் கூடிய பூரண பங்களிப்பும் ஒத்துழைப்பும் இல்லாமல் இலங்கையில் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதோ, நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதோ, நாட்டை - குறிப்பாக வடக்கு, கிழக்கைக் கட்டியெழுப்புவதோ முடியாத காரியங்கள்.

மாநாட்டில் பேசிய அனைத்து நாட்டுப் பிரதிநிதிகளும் இந்த இரண்டு விடயங்கள் பற்றியும் குறிப்பிட்டார்கள்.

டோக்கியோ மாநாட்டில் கடைசி நேரத்திலாவது புலிகள் கலந்துகொள்ளக்கூடும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். அவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளாதது பற்றி எல்லோரும் கவலை தெரிவித்தார்கள்.

சமாதானப் பேச்சுக்களில் புலிகள் விரைவில் கலந்துகொள்ளவேண்டுமென்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தது மட்டுமல்லாமல் அன்புக் கட்டளையிடும் அளவுக்குக்கூட சிலர் சென்றார்கள்.

புலிகள் இயக்கத்தை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக்கொண்டு அவர்களோடு பகைமை பாராட்டிவரும் அமெரிக்க அரசின் பிரதி ராஜாங்க அமைச்சரான றிச்சர்ட் ஆர்மிடேஜ்கூட சமாதானப் பேச்சுக்களில் புலிகள் பங்குகொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினார். மாநாட்டில் புலிகள் கலந்துகொண்டிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும் என்று மாநாட்டை நடத்திய ஜப்பான் நாட்டுத் தலைவர்கள் வாய்விட்டுக் கூறினார்கள். இங்கு புலிகள் வராவிட்டாலும் சமாதானப் பேச்சுக்களில் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும்; கலந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கை தமக்கு உண்டு என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பார்கள். புலிகள் பற்றி சர்வதேச சமூகம் எத்தகைய உயர்ந்த கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் கலந்துகொள்ளாத டோக்கியோ மாநாட்டில் அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னர் வடக்கு - கிழக்கு புனரமைப்பு, அபிவிருத்தி, மக்களின் மனிதாபிமான மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு தாங்களுடைய கூடுதலான பங்குகளுடன் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று வேண்டும் என்று புலிகள் அரசிடம் கோரினார்கள். அரசு அதைத் தட்டிக்கழித்து வந்தது. அதனாலேயே புலிகள் டோக்கியோ மாநாட்டைப் பகிஷ்கரித்தார்கள்.

அதே மாநாட்டில் பிரதமர் ஆரம்ப உரை நிகழ்த்துகையில் தமது அரசின் தவறை ஒப்புக்கொண்டு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்துடன் இடைக்காலத் தேவைக்காகத் தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதாக அறிவித்தார். இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கும் தற்காலிக நிர்வாகக் கட்டமைப்புக்கும் அடிப்படையில் மாற்றமில்லை. பெயரில்தான் வித்தியாசம்.

புதிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டு விட்டது.

அரசும் புலிகளும் இணைந்து சமாதானப் பேச்சுகளை முன்னெடுப்பதோடு, சர்வதேச சமூகம் வழங்கும் நிதிஉதவியை குறிப்பிட்ட புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்குச் சீராகச் செலவு செய்ய வேண்டுமென்று டோக்கியோ மாநாட்டில் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

எதிர்பார்த்த 30ஆயிரம் கோடி ரூபாவுக்குப் பதிலாக 45ஆயிரம் கோடி ரூபாவை வழங்க டோக்கியோ மாநாட்டில் சர்வதேச சமூகம் உறுதியளித்திருக்கிறது.

சமாதான நடைமுறைகளில் முன்னேற்றம் காணப்பட்டால் உதவித்தொகை இன்னும் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அளவுக்கு சர்வதேச சமூகத்திற்கு இலங்கை மீது அக்கறை ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# கைதடி மருந்தகத்தில் நோயாளர்கள் தவிப்பு!

கைதடி,ஜூன்11

கைதடியில் உள்ள அரச மத்திய மருந்தகத்திற்கு நிரந்தர வைத்தியர் இல்லாத காரணத்தினால் அப்பகுதி நோயாளர்கள் பெரும் துன்பங்களையும், அவலங்களையும் அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மத்திய மருந்தகத்தில் கடந்த வருட ஆரம்பத்தில் வைத்தியர் ஒருவர் நிரந்தரமாக கடமை புரிந்து வந்தார். பின்னர் அவர் ஓய்வுபெற்றுச் சென்றார். அதனையடுத்து மேற்படி மருந்தகததிற்கு வாரத்தில் மூன்று நாள்கள் கடமை புரிய வைத்தியர் ஒருவர் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டார். தற்போது அவர் விடுமுறையில் சென்றுள்ளார். அவருக்கு மாற்று ஏற்பாடாக மருத்துவர் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் இப்பகுதி நோயாளர்கள் வைத்திய வசதியைப்பெற முடியாதுள்ளது.

மேலும் கோப்பாய், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் என நீண்ட தூரங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று திரும்ப உடல் நிலையும், பொருளாதார வசதியும் இடம்கொடாத நோயாளர்கள் இதனால், அதிக சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்த நோயாளர்களின் அவலங்களைப் போக்க பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கைதடிப்பகுதி சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் கோரியுள்ளனர்.

கைதடி, நாவற்குழி, மட்டுவில், கோயிலாக்கண்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தமக்கள் இம்மருந்தகத்தினால் வைத்திய வசதிகளைக் கடந்த காலங்களில் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-75)

# நாட்டு நடப்பு

## தருகிறார் கோடி கோ[illegible]

கேட்டதோ முப்பதாயிரம் கோடி
கிடைத்ததோ நாற்பதாயிரம் கோடி
இட்டம் போல் பீரங்கி வாங்கி
இடி ஒலி பல்குழலும் பூட்டி
துட்டராய் மாறிப்பின்னே
தொடுப்பரோ கொடிய போரை
திட்டங்கள் போட்ட பின்னே
திரட்டியே தருவாராம் இன்னும்
கெட்ட இக்காலம் தன்னில்
கேட்பதற்கு யார் தான் உண்டு
இட்டம் போல் "ஈராக்" நாட்டை
இடித்ததும் ஓர் இரவிலன்றோ?
பட்ட நம் பாட்டை எண்ண
பயமதும் அதிகமாச்சு
கெட்டிக்காரர் எமது வீரர்
கீழ்ப்படிந்து ஏமாறமாட்டார்.

- விகடகவி.

யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற

# அதே இடத்தில் சேவையின்போது 733 பேருக்கு பிறப்புச் சான்றிதழ்

## மேலதிக உதவிப் பதிவாளர் நாயகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற 'அதே இடத்தில் சேவையில்' 733 பேருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதென மேலதிக உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தெரிவித்தார்.

கடந்தகால போர்ச் சூழல் காரணமாகப் பிறப்பு, இறப்புக்களை பதிவுசெய்யாதவர்களுக்கு பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் நோக்குடன் 'அதே இடத்தில் சேவை' கடந்த சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் யாழ்.செயலகத்தில் நடைபெற்றது.

இவ்விரு தினங்களிலும் பிறப்புச் சான்றிதழ் வழங்குவது தொடர்பாக 2ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் யாழ்.மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த ஆயிரத்து 729 பேரில் 733 பேருக்கு உடனடியாக பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஏனைய விண்ணப்பதாரிகளில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களில் போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்காத 420 பேருக்கும், பிறப்புச் சான்றிதழ்கள் பெறுவதற்கு விண்ணப்பித்து அதற்குரியவர்களை அழைத்துவராதவர்களில் 345 பேருக்கும் மற்றும் பிறப்புத் தொடர்பான எவ்வித தகவல்களையும் தெரிவிக்காத 231 பேருக்கும் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை.

அதேநேரம், பிறப்புச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்தவர்களில் சான்றிதழ் இலக்கங்களை சரியாக தெரியப்படுத்திய சுமார் 262 விண்ணப்பதாரிகளுக்கு ஓரிரு தினங்களில் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இவ்வாறு அவர்மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சேவையில் இறப்புச் சான்றிதழ் பெற 108 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவை தொடர்பான பூரண தகவல்கள் வழங்கப்படாத காரணத்தினால் அவ் விண்ணப்பங்களுக்கு உடனடியாக இறப்புப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ஒ-5)

# அடிக்கடி மின் தடங்கல்கள் ஏற்பட வீதியோர மரங்களே காரணம்!

## அவற்றை அகற்றி உதவ அதிகாரி வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூன்11

தற்போது அடிக்கடி மின்தடங்கல் ஏற்படுவதற்கு வீதியோரங்களில் ஓங்கி வளர்ந்த மரங்களின் கிளைகள்,மின் விநியோக இணைப்புகளில் உராய்ந்து குறுக்கீட்டை ஏற்படுத்துவதே காரணமென பிரதேச மின் பொறியியலாளர் வி.வேலுப்பிள்ளை தெரிவித்தார்

அண்மைக்காலமாக அடிக்கடி ஏற்பட்டுவரும் மின் தடங்கல் குறித்துக் கேட்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சாதாரணமாக மின்விநியோக இணைப்புக்களைச் சூழ்ந்துள்ள சுமார் 30 அடிகள் வரை உள்ள பிரதேசத்தில் மரங்கள் மற்றும் அதன் கிளைகள் வளர்வது மின் விநியோகத்துக்கு இடையூறாகக் கருதப்படும். அதனால் அப்பகுதிக்குள் நீண்டிருக்கும் மரக்கிளைகளை அகற்றிவிடுவோம். ஆனால் தற்போது அவ்வாறு மரக்கிளைகளை அகற்ற முற்படும் வேளையில் வீட்டு உரிமையாளர்கள் அதற்கு அனுமதி மறுக்கிறார்கள். இதனால் மின்சார சபை ஊழியர்களுடன் அவர்களுக்கு பிணக்குகள் ஏற்படுகின்றன. வீட்டு உரிமையாளர்களின் இச்செயல் முறையற்றதாகும். இதனால் பாதிக்கப்படுவதும் அவர்களே.

மின் விநியோகத்துக்கு இடையூறாக உள்ள மரங்களை அகற்றுவது குறித்து சட்ட நடவடிக்கைகளை எம்மால் மேற்கொள்ளமுடியும். ஆனால் பொதுமக்களுடனான நல்லுறவைப் பேணும் முகமாவே அத்தகைய நடவடிக்கைகளை மின்சார சபை பெரும்பாலும் மேற்கொள்வதில்லை. வீதியோரமாக உள்ள மரங்களின் கிளைகள் மின் இணைப்புக்களில் பலமாக உராய்வதால் மின் ஒழுக்கு ஏற்படுகின்றது. அப்போது 'தடக்கு ஆளி' செயற்பட்டு மின் விநியோகம் துண்டிக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் மின்தடங்கலை தடுப்பதற்கான முயற்சிகளை மின்சாரசபை முடிந்தளவு மேற்கொள்கிறது. ஆயினும் வீதிகள் வழியே அமைக்கப்பட்டுள்ள மின் விநியோகக் கேபிள்கள் உரா யும், தமது காணிகளில் உள்ள மரங்களின் கிளைகளை பொதுமக்களே முன்வந்து வெட்டியகற்றினால், தடங்கலற்ற மின் விநியோகத்தை வழங்க வசதியாக இருக்கும் - என்றார் மின் பொறியியலாளர். (ஒ-9)

# அரசு ஊழியர் அனைவருக்கும் வருட இறுதியில் சம்பள உயர்வு

## அமைச்சர் தெரிவிப்பு

அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் வஜிர அபேவர்த்தின தெரிவித்துள்ளார்

இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

அதியுயர் பதவியிலுள்ள உத்தியோகஸ்தர்கள் முதல் சாதாரண சிற்றூழியர்கள் வரை அரசாங்க சேவையில் கடமையாற்றும் சகலரும் இதனமூலம் நன்மையடைவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வருடஇறுதியில் இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாகவும் இதன்மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களும் நன்மையடைவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

### நாளை

வைகாசி 29
வியாழக்கிழமை
12.06.2003
திதி : திரயோதசி
முன்னிரவு 9.26 வரை
நட்சத்திரம் : விசாகம்
முன்னிரவு 9.57 வரை
சுபநேரம் : 7.22-9.52
ராகுகாலம் : 1.22-2.52
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

விவாதிப்பவன் நோக்கம் வெற்றிபெறவேண்டும் என்பதாக இருக்கக்கூடாது. முன்னேற்றம் காண்பதாக இருக்கவேண்டும்.

# அனுமதியின்றி மரங்களை வெட்டினால் நடவடிக்கை

## தீவகப் பொறுப்பாளர் எச்சரிக்கை

கோப்பாய்,ஜூன்11

அனுமதியின்றி வியாபார நோக்கத்துக்காகவும் சுயதேவைக்காகவும் மரங்களை வெட்டுவோர் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் தீவகப் பொறுப்பாளர் அருந்தவம் எச்சரித்துள்ளார்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்ற விறகு விற்பனை செய்வோர் மற்றும் வேறு இடங்களுக்கு அவற்றை எடுத்துச்செல்வோர் ஆகியோருடனான கலந்துரையாடலின்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

தீவகத்தில் அண்மைக்காலமாக அதிக அளவு மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. இதனால், தீவகத்தில் இயற்கை வளம் அழிக்கப்படுகிறது. இதனை அனைவரும் ஒன்றிணைந்து தடுக்கவேண்டும். இதற்குக் கிராம அலுவலர்களும் தமது ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றார் அவர். (ஒ-10-76)

## கலாசார அலுவலருக்கு செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்11

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 3மணிக்கு இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்மாவட்டத்தில் இயங்கும் இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வருடாந்தம் நடத்தப்படும் செயலமர்வு குறித்து ஆராய்வதற்கென இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் - இந்தக் கூட்டத்தில் அனைத்து கலாசார உத்தியோகத்தர்களும் தவறாது கலந்துகொண்டு செயமலர்வு சிறப்புற ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் - இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-8)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ரூ.50 ஆயிரம் நிதியுதவி

தென்மராட்சி, ஜுன்11

சாவகச்சேரி ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கென வெளிநாட்டில் வதியும் ஒருவர் 50ஆயிரம் ரூபாவினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த அ.சிவகுமார் என்பவரே இந்தத் தொகையினை, கடந்த சனியன்று ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் ஒப்படைத்தார்.

இதேவேளை - மீசாலையைச் சேர்ந்த ஒருவர் கடந்த மாதம் வழங்கிய 40ஆயிரம் ரூபாவுக்கு புதிய நீரிறைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

## நாகர்கோவிலில் 38குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள்

செம்பியன்பற்று,ஜுன்11

நாகர்கோவில், அம்பன் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து குடத்தனை பகுதியில் வசித்துவரும் 38 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் தற்காலிகக் குடியிருப்புக்கள் , கிணறுகள், மலசலகூடங்கள் அமைத்துக் கொடுககப்படவுள்ளன.

அண்மையில் மேற்படி நிறுவனப் பிரதிநிதிகள் குடத்தனைக்கு விஜயம் செய்து பயனாளிகளுடனும் கிராம அலுவலர்களுடனும் கலந்துரையாடிச் சென்றுள்ளனர் எனக்கூறப்பட்டது.

தற்காலிகமாக தனியார் வீடுகளிலும், காணிகளிலும் குடியிருந்த மக்களுக்கே இக்குடியிருப்புக்கள் அமைத்துக்கொடுக்கப்படும். குடத்தனை வடக்கில் 21 குடியிருப்புக்களும், குடத்தனை தெற்கில் 17 குடியிருப்புக்களும் அமைக்கப்படும். கிணறுகள், மலசலகூடங்கள் என்பனவும் நிறுவப்படும். (எ-36)

## பேராசிரியர் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்11

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் அ.துரைராசாவின் 9ஆவது நினைவுதினக் கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் கலாநிதி அ.நவரத்தினராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நினைவுரை நிகழ்த்துவார்.

இதில் கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு பேராசிரியர் அ. துரைராசா நினைவுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஒ-5)

## விவசாயக் கருத்தரங்கு

திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் மாதத்தின் இரண்டாவது வியாழக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகின்ற கருத்தரங்கில் இம்மாதக் கருத்தரங்கு நாளை பிற்பகல் [illegible] மணிக்கு மாவட்ட விவசாய பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

[illegible] பயிர்ச்செய்கை [illegible] பாவனை [illegible] ஆராய்ச்சி உத்தியோகத்தர் [illegible] பாலசிங்கம் பாலகௌரியும், [illegible] தடுப்பூசி ஏற்றலும் [illegible] களும் என்ற பொருள் குறித்து கால்நடை வைத்தியர் டாக்டர் ஆர். ஞானசேகரனும் கருத்துரை வழங்குவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

---

மாவை கொல்லங்கலட்டி

**ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்**

13-06-2003 தேர்த்திருவிழா மறுநாள் தீர்த்த உற்சவம்.
15-06-2003 வைரவர்மடை, பொங்கல்.

தினமும் காலை 8.00 மணி தொடக்கம் மினிபஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தெல்லிப்பழை தடைமுகாமிற்கு வரவும்.

(18751) -அறங்காவலர்.

---

**ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் மிதிவெடி, வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுயமுயற்சிக் கடன் வழங்கல் திட்டம்**

மிதிவெடி மற்றும் வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சியும், தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் உதவியும் வழங்க ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) எண்ணியுள்ளது. இதன் இரண்டாம் கட்டமாக வடமராட்சி பிரிவில் உள்ள பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தரமாக வசிக்கும் பாதிப்புற்றவர்கள் இன்று 11,12,13ஆம் திகதிகளில் காலை 10.00 - 2.00 மணிவரை நேரடியாக வந்து தொடர்புகொள்ளவும்.

*உங்கள் தொடர்புகளுக்கு:*

**ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், தொழில் பயிற்சி மையம்,**

*இலகடி (சதாபொன்ஸ் கல்வி நிலையம் அருகில்).*

*அல்வாய் கிழக்கு, அல்வாய்.*

(C/28318)

---

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



அமரர்

**நமசிவாயம் சுந்தரலிங்கம்**

தோற்றம் 16.08.1928 — மறைவு 12.05.2003

யாழிசை ஒளிரும் நகரிலே நல்ல ஊராக விளங்கும்
இணுவையூரிலே வந்துதித்த எமது தந்தையே!
எங்கள் அனைவருக்கும் நல்வாழ்வு தந்த
மனிதரில் மாணிக்கமே! உமது பிரிவைத் தாங்காது
தத்தளிக்கும் நாம் ஒரு திங்கள் நிறைவில்
உங்கள் ஆன்மா அமைதியடைய எல்லா
ஜீவன்களுக்கும் மேலான இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (11.06.2003) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"மல்லிகா பவனம்"
இணுவில் கிழக்கு, இணுவில்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(18758)

---

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

தோற்றம் 30 - 04 - 1944



மறைவு 12 - 05 - 2003

**அமரர் அந்தோனிப்பிள்ளை எட்வேட் பாலசிங்கம்**

(இளைப்பாறிய சாரதி, இ.போ.ச. கோண்டாவில் சாலை)

**அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது அன்புத் தந்தையாரின் மறைவு கேட்டு நேரிலும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபந் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் இல்லத்துக்கு வந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை செய்த பங்குத் தந்தை அவர்களுக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (11-06-2003) புதன்கிழமை ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி தேவாலயத்தில் நடைபெறும் திருப்பலி ஒப்புக்கொடுத்தலிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாவற்கட்டு,
ஆனைக்கோட்டை. (18947)

அன்பு மனைவி, பிள்ளைகள்.

---

**16ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



திருமதி

**பொன்னுச்சாமி ஐயர் அம்மாக்கண்டு**

(இறப்பு: 28-05-2003)

எங்களுக்காய் ஒளிர்ந்த
சுடர் ஓய்ந்ததம்மா!
எங்களது நீரூற்று வரண்டதம்மா!
பாலையிலே பரிதவிக்கும்
எங்களுக்கு ஒளியூட்டி
வழிகாட்ட வரவேண்டும் நீங்கள்.

28-05-2003 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (12-06-2003) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதி கோவில்,
தொண்டமனாறு. (18803)

பிள்ளைகளும், பெறாமக்களும், மருமக்களும், பேரப்பிள்ளைகளும்.

---

SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
be sharp
SHARP



உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.
Browns Electronics Live it up
BG Browns Group ESTD 1875
Browns Group of Companies
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150



மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றிய பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் தமது சேவையை முடித்துக்கொண்டு திரும்புவதை ஒட்டி நடத்திய பிரியாவிடை நிகழ்வின்போது வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை பாராட்டுரை வழங்குவதையும் அருகில் பிரான்ஸ் மருத்துவக் குழுவைச் சேர்ந்த வைத்தியர்கள் அமர்ந்திருப்பதையும் முதற்படத்தில் காணலாம்.

இரண்டாவது படத்தில் வல்வெட்டித்துறை அரசினர் மாவட்ட வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் மருத்துவர் ஒருவருக்கு நினைவுப் பரிசை வழங்குவதைக் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# கொடிய யுத்தத்தின் மத்தியில் மக்களுக்குச் சேவையாற்றிய திருப்தியுடன் விடைபெறுகிறோம்!

## பிரான்ஸ் மருத்துவக் குழு இணைப்பாளர் உரை

வடமராட்சி,ஜூன்11

யுத்தம் நிகழ்ந்த காலத்தில் இந் நாட்டு மக்களுக்குச் சேவையாற்றிய திருப்தியுடன் நாம் திரும்புகிறோம்.

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் யாழ் போதனா வைத்தியசாலையிலும் மருத்துவ சேவையாற்றிய பிரான்ஸ் மருத்துவ குழுவைச் சேர்ந்த இலங்கைக்கான இணைப்பாளர் வைவ் (YVE) இவ்வாறு தெரிவித்தார்.

இக்குழுவைச் சேர்ந்த மருத்துவர்கள் சேவையை நிறைவுசெய்து கொண்டு தாயகம் திரும்பினர். அந்த மருத்துவ குழுவுக்குப் பிரியாவிடை அளிக்கும் வைபவம் அண்மையில் மந்திகை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் இகதிரைவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோதே வைவ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக எமது சேவையை இன, மத, அரசியல் வேறுபாடுகளின்றி இந்த மண்ணில் மேற்கொண்டோம். எமது குழுவிலும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் பணியாற்றினார்கள். நாம் இந்த மண்ணில் எமது சேவையை நிறைவுசெய்து கொண்டு செல்வதற்குக் காரணம் இங்கு தற்பொழுது சமாதான சூழல் ஏற்பட்டுள்ளமையேயாகும்.

உலக நாடுகள் பலவற்றில் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட யுத்தங்களும் அதனால் ஏற்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவத் தேவைகளுமே இவ்வாறான ஓர் அமைப்பின் மூலம் சேவையாற்ற எம்மைத் தூண்டியது. அதன் ஓர் அங்கமாகவே இங்கு பணியாற்றினோம். இங்கு எமது சேவையைத் திறம்பட மேற்கொள்ள உதவிய எமது குழுவினருக்கும் எம்முடன் இணைந்து பணியாற்றிய இந்த மண்ணின் வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இப்பணியை நாம் இங்கு மேற்கொள்ள அனுமதி வழங்கிய இலங்கை அரசுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றார்.

இந்த நிகழ்வில் வல்வெட்டித்துறை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் மயிலேறும்பெருமாள், மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம், மந்திகை ஆதார வைத்தியசாலை மருத்துவ நிபுணர் டாக்டர் எஸ். இராஜலிங்கம், மூத்த தாதிய உத்தியோகத்தர் திருமதி ஞானம் நடராசா, பிரான்ஸ் மருத்துவக் குழுவின் பருத்தித்துறை இணைப்பாளர் செல்வி எஸ்.சிகோவின் ஆகியோரும் உரையாற்றினார்கள்.(ஓ-10-173)

# குடாநாட்டின் மீள் கட்டுமானத்தில் 'போரூட்' தொடர்ந்து பங்காற்றும்

## நிறுவன வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்11

யுத்த அனர்த்தங்களால் சிதைவடைந்துள்ள யாழ்.குடாநாட்டு மக்களின் சிவில் கட்டமைப்பைப் பலப்படுத்தும் ஆக்கபூர்வமான பணிகளில் 'போரூட்' நிறுவனம் தொடர்ந்து ஈடுபடும்.

- இவ்வாறு தெரிவித்தார் 'போரூட்' நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி போல் ஹென்றிக்சென்ல்ட்.

நிறுவனத்தின் நாலாவது பிராந்திய மாநாடு அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்குள்ள மக்களின் சமூக, பொருளாதார, அபிவிருத்திகளை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு எமது செயற்றிட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

போரினால் இலங்கையிலும், குறிப்பாக யாழ்.குடாநாட்டிலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைகளை உயர்த்தும் சீரிய பணியில் நாம் ஈடுபட்டு வருகிறோம்.

எமது நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட சீநோர் நிறுவனமும் கடந்த கால யுத்த சூழ்நிலையினால் செயலிழந்துவிட்டது. ஆயினும், அதனை மீள இயக்குவதற்குத் தேவையான நிதியினை வழங்கக்கூடிய நிலையில் எமது நிறுவனம் இல்லை. மாறாக சமூகத்தின் மாற்றத்துக்காக அடிமட்ட மக்களுடன் கைகோர்த்து அவர்களின் தேவைகளை அறிந்து அவற்றைச் செயற்படுத்தி வருகிறது.

ஐரோப்பிய நாடுகள் உட்படப் பல நாடுகளில் மதுபானம், போதைப்பொருள், புகைப்பொருள் ஆகியவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்தும் பல திட்டங்களை எமது நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இலங்கையிலும் இவ்வாறான திட்டங்களை அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கிராம மட்டத்திலான அமைப்புகள் மூலம் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த மாநாட்டில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் மற்றும் இந்தியா, நேபாளம், நோர்வே, சுவீடன், தென் ஆபிரிக்கா, ஷாம்பியா, வியட்நாம் உட்பட பத்துக்கு மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

(எ-10-5)

# மலையகப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு அழைப்பு

இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல், சமூகப பிரச்சினைகளை சர்வதேச கவனத்திற்குக் கொண்டு வருவதற்கான அமைப்பொன்றினை டென்மார்க்கில் ஆரம்பித்து வைத் திருப்பதாக அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வும், அதற்கான வேலை திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்ற இக்காலகட்டத்தில் மலையக மக்களின் அரசியல் உரிமைகள் பற்றிய தேவைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச் செல்வது அத்தியாவசியமான அரசியல் கடமையாகும் என்றும் அமைச்சர் சந்திரசேகரன் கூறுகிறார்.

# வெவ்வேறு இரு கசிப்பு வழக்குகளில் மடம் வீதி வாசிக்கு சிறைத்தண்டனை!

கசிப்பு வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரில் ஒருவருக்கு இரு வழக்குகளில் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மடம் வீதியைச் சேர்ந்த இராமலிங்கம் தெய்வேந்திரராசா என்பவருக்கே நேற்றுமுன்தினம் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கசிப்பு வைத்திருந்தமை தொடர்பான முதலாவது வழக்கில் மேற்படி நபருக்கு 6 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் 50ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. இரண்டாவது வழக்கில் 6 மாத கடூழிய சிறைத்தண்டனையும் 75 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

மேற்படி இரு வழக்குகளிலும் விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்தத் தவறின் இரண்டுக்கும் தலா 6 மாதம் மேலதிக சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி நபர் சிறைத்தண்டனையை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும் என்றும் - நீதிவான் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

கசிப்பு வைத்திருந்ததற்காக முதல் ஒரு தடவை கைதான இந்த நபர், அது தொடர்பான வழக்கு நடைபெற்ற காலகட்டத்தில் கசிப்பு வைத்திருந்ததால் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-8)

# இலங்கை வங்கி பிராந்திய அலுவலகத்தை திருமலையிலிருந்து மாற்ற மீண்டும் முயற்சி!

திருகோணமலையில் இயங்கி வரும் இலங்கை வங்கியின் பிராந்திய அலுவலகம் அம்பாறைக்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மீண்டும் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஊழியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலையில் டோக்கியோ சிமெந்து, பிறிமா ஆலை நிறுவனம், கனிப்பொருள் கூட்டுத்தாபனம், மீன்பிடிக் கூட்டுத்தாபனம் போன்ற முக்கியத்துவம்வாய்ந்த வர்த்தக நிறுவனங்கள் இயங்குகின்றன.

எதிர்காலத்தில் பாரிய கைத்தொழில் நகரமாக மாறவிருப்பதாகக் கூறப்படும் திருகோணமலை நகரை விட்டு பிராந்திய அலுவலகத்தை அம்பாறை நகருக்கு மாற்றவேண்டியதன் அவசியம் என்ன என்றும் வினவப்படுகிறது. இந்த அலுவலகத்தை ஏற்கனவே மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியின் தலையீட்டை அடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனினும் மீண்டும் திரைமறைவில் அந் நடவடிக்கைகள் தொடரப்படுகின்றன. (ஓ)

# இலங்கை - இந்திய கப்பற்சேவை: ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்து

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை இந்திய மத்திய அரசு அண்மையில் வழங்கியிருக்கின்றது. இலங்கை அரசாங்கம் இதற்கு ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, கொழும்புத் துறைமுகத்துக்கும் தூத்துக்குடி துறைமுகத்துக்கும் இடையில் இந்த பயணிகள் சேவை நடத்தப்படவுள்ளது.

விரைவில் இலங்கைக்கு வரவுள்ள இந்திய மத்திய கப்பல்துறை அமைச்சர் இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார்.

கடல்மார்க்கமான போக்குவரத்து ஒப்பீட்டளவில் மலிவானது என்பதால் இந்தக் கப்பல் சேவையில் பயணிகள் அதிக நாட்டம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஓ-4)

# பதுளையில் கண்டனப் பேரணி

மஸ்கெலியா பிரன்ஸ்விக் தோட்ட மாணவி கடத்தல் முயற்சியையும், பொலீஸாரின் பாரபட்ச நடவடிக்கைகளையும் கண்டித்து பதுளையில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இப் பேரணியில் பதுளை மாவட்டத்தின் அனைத்து பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான தோட்டத் தொழிலாளர்களும், பாடசாலை மாணவ மாணவிகளும், சமூக அமைப்புகளும், தொண்டர் ஸ்தாபனங்களும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும், தமிழ் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக நலன்விரும்பிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஊவா மாகாண சபை உறுப்பினரும், இ.தொ.கா. உதவிச் செயலாளருமான எம்.சச்சிதானந்தன் தலைமையில் இப்பேரணி இடம்பெற்றது. பாடசாலை மாணவர், மாணவிகளின் பாதுகாப்பை உறுதிசெய், பொலீஸாரே நீதியை நிலை நாட்டு என்ற சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை, பேரணியில் கலந்துகொண்டோர் தாங்கியிருந்தனர்.

# இளவாலை மண்ணுக்கு பெருமை சேர்த்த திரேசா அடைக்கலமுத்து ஆசிரியை

தம்வாழ்வாலும் பணியாலும் இளவாலை மண்ணுக்கு வளம் சேர்த்த திரு.ச.அடைக்கலமுத்து - அமுது அவர்களின் துணைவியார் திருமதி திரேசா அடைக்கலமுத்து லண்டனில் ஈலிங் மருத்துவமனையில் ஜூன் மாதம் 2ஆம் திகதி இறைபதம் அடைந்தார். இவரின் இறுதி ஆராதனைகள் நேற்று 10ஆம் திகதி இளவாலையில் நடைபெற்றன.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் சிரேஷ்ட உப அதிபராகப் பணியாற்றி இளைப்பாறிய பின் திருமதி திரேசா அடைக்கலமுத்து லண்டனில் வசித்துவந்தார்.

1919ஆம் ஆண்டு இளவாலையில் பிறந்த இவர், தமது வாழ்வின் பெரும்பகுதியை கல்விப் பணியிலேயே செலவிட்டார். 1940ஆம் ஆண்டு அநுராதபுரம் சென்.யோசப்

**அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை**

கல்லூரியில் தன் ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர் ஊர்காவற்றுறை திருக்குடும்ப கன்னியர்மடம், பெரியவிளான் பாடசாலை, யாழ்சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்விப்பணி புரிந்தார். தமது சொந்த மண்ணான இளவாலையின் புகழ்பூத்த கல்லூரியான ஹென்றியரசர் கல்லூரியில் தமது பணிகளை 1975ஆம் ஆண்டு வரையாற்றி இளைப்பாறினார். திருமதி திரேசா அடைக்கலமுத்து 'பாதுகாவலன்' பத்திரிகையின் மூத்த எழுத்தாளரும் அண்மையில் பாப்பரசர் விருது

**நீத்தார் நயப்புரை**

வழங்கிக் கௌரவிக்கப்பட்டவருமான வித்துவான் புலவர் அடைக்கலமுத்து - அமுதுவின் துணைவியாராவார். திருமதி திரேசா அடைக்கலமுத்து தம் அன்புப் பிள்ளைகளில் ஒருவரான ஏ.ஜே.வி.சந்திரகாந்தன் அடிகளாரை யாழ்மறை மாவட்டத்தில் பணிபுரிய அர்ப்பணம் செய்தவர்.

இவரின் மற்றைய பிள்ளைகளான பானுமதி, இந்துமதி, காந்திமதி, ஜெயமதி, ரூபினா, செபஸ்தியான், கலாநிதி வசந்தகுமார், இளஞ்செழியன், அமுதரசன் ஆகியோரை வாழ்வில் நல்நிலைப்படுத்தி பார்த்து மகிழ்ந்த பின் அவர்களை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார்.

இவரின் இறுதி ஆராதனைகள் இங்கிலாந்து நோத், கோல்ட் மன்டிவல் வீத், சென். பெனடிக் தேவாலயத்தில் ஜூன் 7ஆம் திகதி நிகழ்த்தப்பட்டன. அவரின் உடல் லண்டனில் இருந்து அவரின் சொந்த இடமாகிய இளவாலைக்கு எடுத்து வரப்பட்டது.



நேற்று ஜூன் 10ஆம் திகதி இளவாலை புனித அன்னாள் தேவாலயத்தில் ஆராதனைகளின் பின் இளவாலை சேமக்காலையில் இவரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தமது கல்விப் பணியால் சிறந்த கல்வியாளர்களை இளவாலையிலும் அதனை சூழவுள்ள கிராமங்களிலும் இவர் உருவாக்கியுள்ளார். இளவாலை மண்ணின் முன்னேற்றத்திற்காக பல சமூகப் பணிகளையும் அன்புப் பணிகளையும் ஆற்றிய இவரின் ஆன்மா இறைபதம் அடையவேண்டுவோம்.

☆

அம்பாள் துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்கள கரமான சுபானு வருடம் வைகாசி மாதம் 31ஆம் நாள் (14.06.2003) சனிக்கிழமை பகல் 12.00மணி முதல் 2.15மணிவரை வரும் கேட்டை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **சி.செல்வராசா** | **செ.விஜயகுமாரி** |
| (செல்வம்) | (பேபி) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

அம்பிகையின் திருவருள் துணை கொண்டு ஸ்ரீ காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

(இரு வீட்டார் அழைப்பிதழ்)

இங்கனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு சின்னையா
473/18 யூனிற்
தர்மபுரம்

திருமதி செல்லத்துரை சாரதாம்பாள்
குடும்பத்தினர்
21 A சபாபதி வீதி
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்


## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்குப் பாவியுங்கள்!

★ *100% இளமையையும் வலிமையையும் தரும்!*

## சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED BY:
SITHARA PRODUCTS,
PUTTALAM ROAD.
(REG.NO: 6382) AR/PR/No. 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். TP:222 2567.

(C27864)


## கட்டட வரைபட பயிலுநர்கள் தேவை

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கைதடி, சரசாலை, வரணி, உசன், மீசாலை போன்ற இடங்களில் ஆரம்பிக்கவிருக்கும் எமது அலுவலகத்திற்கு கட்டட வரைபட பயிலுநர்கள் தேவை.

க.பொ.த.சாதாரண தர தகைமையுடன் இருபாலாரும் சுயவிவரக் கோவையுடன் **20.06.2003**இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

பயிற்சிக் காலத்தில் சம்பளமும் வழங்கப்படும். அத்துடன், மேற்குறிப்பிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: **கட்டடக்கலை ஆலோசகர்,
ஏ.எஸ்.ஞானம்,**
மடத்தடி றோட், கண்டி வீதி,
கொடிகாமம். (18997)

## வீட்டிலுள்ளோர் உறங்கிய சமயம் திருடர் கைவரிசை!

கைதடி,ஜூன்11

வீட்டில் உள்ளோர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தவேளை திருடர்கள் அங்கிருந்த நீரிறைக்கும் இயந்திரத்தை அபகரித்துச் சென்ற சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு கைதடி கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

கைதடி கிழக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை கந்தசாமி என்பவரின் வீட்டிலேயே இத்திருட்டு இடம்பெற்றது. இத்திருட்டு சம்பந்தமாக சாவகச்சேரி பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரமும் கைதடி வயோதிபர் இல்லத்திற்கு முன்பாகவுள்ள சிவலைக்குஞ்சன் என்பவரின் வீட்டினுள் ஆளில்லாத வேளை உட்புகுந்த திருடர்கள் திருமண நிகழ்வுக்காக வைத்திருந்த நகைகள், புது உடுபுடைவைகள் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

அண்மைக்காலமாக கைதடிப்பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.(ஒ-75)

## மருதங்கேணியில் புனரமைப்புத் திட்டங்கள்

செம்பியன்பற்று,ஜூன்11

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பொதுச்சந்தை, மீன் சந்தை, மருதங்கேணி நூலகம், கடற்கரைக்குச் செல்லும் வீதி ஆகியவை உட்பட பலவற்றின் புனரமைப்புப் பணிகள் 'நிக்கொட்' மற்றும் 'நீப்' நிறுவனங்களால் தனித்தனியாக செய்யப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மருதங்கேணி பொதுச்சந்தை, மருதங்கேணி பொது நூலகக் கட்டடம், மாமுனை மீன் சந்தை, உடுத்துறை மீன்சந்தை, மாமுனையிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதி, செம்பியன்பற்றிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதி, வடலியடை பிள்ளையார் கோவிலிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதி, நாவலடி மருதங்கேணி சந்தியிலிருந்து உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு செல்லும் வீதிகள் ஆகியவையே புனரமைக்கப்படவுள்ளன. (ஒ-36)

## மனநலம் குன்றிய இளைஞரை காணவில்லை

வவுனியாவைச் சேர்ந்த மனநலம் குன்றிய இளைஞர் ஒருவரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ரவீந்திரன் சிவதர்சன் (வயது - 19) என்ற இளைஞனே கடந்த நாலாம்திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவரது உறவினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் வசித்து வந்த இவர், அண்மையில் கோப்பாய் பகுதியிலுள்ள உறவினரின் வீட்டில் தங்கியிருக்கும்போதே காணாமல் போயுள்ளார்.

இவர் காணாமல் போனமை தொடர்பாக கோப்பாய் பகுதியிலுள்ள படை முகாம்களிலும், பொலீஸ் நிலையம் மற்றும் விடுதலைப் புலிகளிடமும் முறையிடப்பட்டுள்ளது. (ஒ-5)

## நீங்காத நினைவலைகள்

15ஆம் ஆண்டு — 11ஆம் ஆண்டு





**அமரர் கந்தையா செல்வநாயகம்**
(முன்னாள் பட்டின சபைத் தலைவர்)

**திருமதி மகேஸ்வரி செல்வநாயகம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 23-08-1909 | ← | மலர்வு | → | 28-09-1913 |
| 28-05-1988 | ← | உதிர்வு | → | 27-10-1992 |

திதி: 11-06-2003

*எங்கள் அன்புத் தெய்வங்களே!
ஆண்டுகள் பல ஆனாலும் ஆறவில்லை எங்கள் இதயம்
உங்களை நினைத்தே இவ்வுலகில் வாழ்கின்றோம்.*

"மானியம்பதி", மானிப்பாய்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(18994)

## திருமண வாழ்த்து



இல்லறமாம் நல்லறத்தில்
இன்று (11.06.2003) புதன்கிழமை
இனிதே மங்களகரமாக லண்டனில்
இணையும் புதுமணமக்கள்

**திரு.திருமதி குமரன் வதனி**

தம்பதிகளை
பல்லாண்டு காலம் பதினாறு பேறும் பெற்று
நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

அன்புத் தந்தை,
தாய்,
சகோதரிகள்.

தகவல்:
ந.சண்முகம்,
வீரபத்திரர் கோயிலடி,
கல்வியங்காடு.

(18990)

## அறுநூற்று ஐம்பத்தேழாம் நாள் காவியமானாய்.....

| மண்வாழ்வு | விண்வாழ்வு |
|---|---|
| 06 | 24 |
| 08 | 08 |
| 1967 | 2001 |



நடன கலா வித்தகர்

**திருமதி தர்மகுலசிங்கம் விமலலோஜினி**

B.A .(Hons) Dip. in. Edu. (Merit)

(ஆசிரியை - மானிப்பாய் மகளிர் கல்லூரி)

நெஞ்சங்கள் ஒன்றிணைந்த கணையாளி
வஞ்சகத்தால் அழிப்பதற்குரிமையுண்டோ?
பண்டைத்தமிழ் பூர்வீக சின்னமது
என்றேனுமொருநாள் வரலாறு பாடம் சொல்லும் - என
நெஞ்சுருகி நினைக்கின்றேன்.
அறுநூற்று ஐம்பத்தேழில்......!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கருகி நிற்கும் விழுதுகள்
கணவன்:- தர்மகுலசிங்கம்,
மகன்:- விமலலோஜன்,
மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார்.

மானிப்பாய் வீதி,
உடுவில்.

(18818)

## நீங்காத நினைவில் ஓராண்டு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 | 23 |
| 05 | 05 |
| 1932 | 2002 |



**அமரர் இளையதம்பி நடனமூர்த்தி**

(மண்டைதீவு - 6ஆம் வட்டாரம்)

கண்ணுக்குள் கனவாகி காற்றாகி
பிரிந்தும் பிரியாது மறைந்தும் மறையாமல்
இவ்வுலக வாழ்க்கை போதுமென்று ஆனதுவோ?
ஓலமிடுகின்றோம் - நீங்கள் உணராத நிலையானீர்களே!

தங்கள் நினைவில் வாழும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*முதலாவது ஒழுங்கை,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.*

(18960)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிராசா கமலாம்பிகை

வேலணை மேற்கைச் சேர்ந்த திருமதி தம்பிராசா கமலாம்பிகை அவர்கள் 09-06-2003 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும் சொரூபராணி (கொழும்பு), சிறிஸ்கந்தராசா (கனடா), சிறிகுகன் (வவுனியா வர்த்தகர்), சிறிசெல்வம் (லவன், கொழும்பு ஞானமணி அன் கம்பனி), யமுனா (யாழ்ப்பாணம்), சிறிசத்தியசெல்வம் (சவூதி பொறியியலாளர்), புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசலிங்கம் (வசந்தம் பூட்ஸ், கொழும்பு), கேதாரகௌரி, செந்தமிழ்செல்வி, சசிகலா, சடகோபன் (சண்முகா ரேட்சென்ரர், யாழ்ப்பாணம்), சுமதி, லோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, தர்மலட்சுமி, கந்தசாமி, சண்முகம், அன்னமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-06-2003) புதன்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, பிற்பகல் 3.00மணிக்கு பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
18/2, விநாயகர் லேன், சுண்டிக்குளி. **ச.சடகோபன்** (மருமகன்)

# இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக மூன்று அரச நிர்வாகங்கள் இயங்கும்நிலை!

**வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப் பணிகளிலும் அரசியல் இலாபம் தேட முனையும் அரசியல்வாதிகள் குறித்து 'லங்காதீப' இதழில் சுனந்த தேசப்பிரிய எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.**

கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் இதுபோன்ற வெள்ளப்பெருக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை எனக் கூறுமளவுக்கு அண்மையில் நம் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு பெரும் பாதிப்புகளை உருவாக்கியது. இவ்வெள்ளப்பெருக்கால் சேர்ந்த குப்பை கூளங்களை அகற்ற மேலும் சிலகாலம் செல்லக்கூடும். எல்லாவற்றையும் விடப் பொதுமக்களது இயல்பு வாழ்க்கைக்கு ஏற்பட்ட பாதிப்பே முக்கியமான விடயமாகும். ஏழ்மை நிலையிலும் ஏதோ ஒரு விதத்தில் தமது வாழ்க்கையை நகர்த்தி வந்த



அந்த ஏழைப் பொதுமக்கள், மீண்டும் தமது வாழ்க்கையை ஓட்டக்கூடிய அளவுக்குத் தம் தொழில் முயற்சிகளில் ஈடுபட முடியாத விதத்தில் இந்த வெள்ளப்பெருக்கால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பெருமளவில் குவிந்தோ, ஒன்று சேர்ந்தோ இருப்பவை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பொதுமக்களின் உடைமைகள் மற்றும் குப்பை கூளங்கள் மட்டுமல்ல, வெள்ளப் பெருக்கையடுத்து *மீண்டும் தலையெடுத்துள்ள அரசியல்* அதிகாரப் போட்டிகள் என்ற குப்பை கூளங்களுமாகும். ஸ்ரீலங்காவில் இரு அரச நிர்வாகங்களல்ல, மூன்று அரச நிர்வாகங்கள் இடம்பெறுவதாக காட்டிக்கொள்ளும் வகையில் அரசியல் அதிகாரப் போட்டி பரவலாகியுள்ளது.

இதுவரை காலமும் கொழும்பில் சட்டபூர்வமான அரச நிர்வாகமும் வன்னியில் சட்டபூர்வமற்ற அரச நிர்வாகமும் மட்டுமே நடைபெற்று வந்தன. ஆனால், தற்போது கொழும்பில் இரு அரசுகள் இயங்கி வருகின்றன. அவை ஜனாதிபதியின் அரச நிர்வாகமும், பிரதமரது அரச நிர்வாகமுமாகும். பிரதமர் நாடாளுமன்றத்தின் தலைவராக நிர்வாகம் மேற்கொள்ளும் அதேவேளை, ஜனாதிபதியோ பொ.ஐ.முன்னணியின் வசமுள்ள மாகாண சபைகளின் தலைவியாக விளங்குகின்றார்.

ஜனாதிபதி மாகாண சபைகளின் ஆளுநர்களாகத் தாம் விரும்புபவர்களையே நியமிக்கிறார். ஜே.ஆர். அறிமுகப்படுத்திய அரசமைப்பு விதிகளின் படி அவ்வுரிமை அவருக்குக் கிட்டியது. தற்போது கண்டி மாகாணசபை தவிர்ந்த மற்றெல்லா மாகாணசபைகளும் பொ.ஐ.முன்னணியின் நிர்வாகத்திலேயே உள்ளன. ஜனாதிபதி சந்திரிகா தற்போது தனது அரசியல் நடவடிக்கைகள் யாவற்றையும் இம்மாகாணசபைகளின் ஊடாகவே முன்னெடுத்துச் செல்கிறார்.

வெள்ளப்பெருக்கு, பயமுறுத்தலுக்கு முகங்கொடுக்கும் வகையிலும், புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமாக ஜனாதிபதி நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாவை அவர் ஒதுக்கினார். அந்நிதி மூலமான செலவீனங்கள் ஜனாதிபதி காரியாலயம் மற்றும் பொ.ஐ.முன்னணியின் வசமுள்ள மாகாணசபைகளினூடாக மேற்கொள்ளப்படும். அவசர, உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஜனாதிபதி தனிப்பட்ட வகையில் ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்களையும் வெளியிட்டுள்ளார்.

மற்றொருபுறம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவசர, உதவி நடவடிக்கைகளுக்காக விசேட அமைச்சர் குழுவொன்றினை நியமித்துள்ளார். நிவாரண நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சராக சரத்சந்திர ராஜகருணை இருந்துவரும் நிலையிலும், பிரதமர் இவ்வித விசேட அமைச்சர்கள் குழுவினை நியமித்துள்ளார். முன்னர் சரத்சந்திர ராஜகருணவை அமைச்சராக நியமிப்பதற்கு ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். திடீர் அனர்த்தங்கள் தொடர்பான விடயங்கள் தமது பொறுப்பில் இருப்பதாகவும், அவ்வகை நடவடிக்கைகளை தமது அதிகாரத்தின் கீழ் செயற்படும் விசேட ஜனாதிபதி நடவடிக்கைக் குழுவே மேற்கொள்ளுமெனக் கூறியே அவர் அவ்வித நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

எவ்வாறானபோதும் ஐந்து மாத காலமாக இடம்பெற்ற இக்கயிறிழுப்பின் பின்னர், ராஜகருண அமைச்சராக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

ஆயினும், அவரது அமைச்சின் கீழ் இடம்பெறவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதுவரை வர்த்தமானி மூலம் எவ்வித விவரமும் வெளியிடப்படவில்லை. அதனால் சரத் சந்திர ராஜகருண அமைச்சரொருவருக்குரிய எவ்வித கடமைகளையும் ஆற்றாத, வேலையற்ற அமைச்சர் என்ற அதிர்ஷ்டத்திற்கு உரிமையாளராக உள்ளார். வெள்ளப்பெருக்கு சேதத்துக்கான நிவாரண நடவடிக்கைகளில் எந்தவொரு நிகழ்விலும் அவரைக் காண முடியவில்லை.

அதற்கு மேலாக சமூகசேவை அமைச்சரான ரவீந்திர சமரவீரவின் கட்டுப்பாட்டிலும் இந்நிவாரண நடவடிக்கைகளின் ஒரு பிரிவு ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கான அமைச்சரான ஜயலத் ஜயவர்த்தனவுக்கும் இந்நடவடிக்கைகளில் ஒருபகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் பிரதமரின் கீழ் இவ்வகை நடவடிக்கைகளுக்காக மூன்று அமைச்சர்கள் உள்ள வேளையில், பிரதமர் தனிப்பட்ட வகையில் இந் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கினார். உண்மையில் இவ் வெள்ளப்பெருக்கு நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான அரசின் திட்டங்களில் அவ்விடயத்துக்குப் பொறுப்பான மூன்று அமைச்சர்களுக்கும் எவ்வித பொறுப்பும் வழங்கப்படவில்லை. ஜனாதிபதியின் நிவாரண நடவடிக்கைகளை எதிர்கொள்வது பிரதமரின் நிவாரண நடவடிக்கைகளே.

மற்றொரு வகையில் நிவாரணப் பணி மாகாண சபைகளுக்கானதொரு விடயமாகும். மத்திய அரசும் மாகாண அரசுகளும் சமமான பொறுப்பு வகிக்கும் விதத்திலேயே இவ்விடயம் தயாரிக்கப்பட்டுள்ளது. 500இற்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்டதும் ஐந்து லட்சம் மக்களை அவர்கள் வாழ்ந்த பகுதிகளிலிருந்து வெளியேறச் செய்ததுமான வெள்ளப் பெருக்கு, இந்நாட்டின் அரச நிர்வாக அதிகாரத்தில் எவ்வளவு தூரம் சுயநலம் பேணும் நோக்கு உள்ளதென்பதைக் காட்டியது. இந்த நிவாரணப் பணிகளுக்குத் தலைமை தாங்குமாறு ஜனாதிபதியைப் பிரதமர் கோரிய போதிலும் இதுவரை திருப்தியான பதில் எதுவும் வழங்கப்படவில்லை. நாட்டின் முக்கிய பிரச்சினைகளில் தனது கருத்துக்கு மதிப்பளிக்காமல் நடந்துகொண்டமையால் எதற்காக இவ்விடயத்தைத் தான் பொறுப்பேற்க வேண்டுமென ஜனாதிபதி கருதக்கூடும்.

சுயநல நோக்குடனான அரச நிர்வாக அதிகாரம் இவ்விதம் பரவலடைவதால், உருவாகும் மற்றொரு பின்னடைவு முகாமைத்துவத்தில் ஏற்படும் சீர்கேடுகளாகும். நிவாரண நடவடிக்கைகளுக்கென அமைச்சரொருவர் இருந்தபோதிலும் அவருக்கு கடமைகள் வழங்கப்படவில்லை. இது யாருடைய தவறு? அடிக்கடி வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்படும் இரத்தினபுரி நகரத்தை வேறொரு பாதுகாப்பான இடத்துக்கு மாற்றுவது தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இடைநடுவில நிறுத்தப்பட்டது. அத்தவறுக்குப் பொறுப்பானவர்கள் யார்? எவரது விருப்பத்துக்காக அத்திட்டம் நிறுத்தப்பட்டது? அவசர நிவாரணப் பணிகளுக்காக 1998இல் விசேட ஜனாதிபதி நடவடிக்கைக்குழு பற்றிப் பிரகடனப்படுத்தப்பட்டபோதிலும் அதனால் எவருக்காவது நன்மை கிட்டியுள்ளதா? அக்குழு இந்தச் சந்தர்ப்பத்திலாவது நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதா?

இவையாவும் என்றைக்கும் விடை காண இயலாத வினாக்களாகும். எவர் மீதும் குற்றம் கண்டு பிடிக்காத அரசியல்வாதிகளின் கவரும் தன்மையே இதுவாகும். ஆக, கூடி இவை தொடர்பாக நாடாளுமன்ற விவாதமொன்று ஒழுங்கு செய்யப்படுவது மட்டுமே இவற்றுக்கான முடிவாய் அமையும்.

இறந்தவர்களை நாடு மறந்து விடலாம். பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படலாம். ஆனால், ஜனாதிபதி மாளிகை மற்றும பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் ஆகியவற்றில் அவசியமற்ற நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. நிவாரண மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் மூலம் மேலும் பல அரசியல்வாதிகள் கோடீஸ்வரர்களாகின்றனர். இவை யாவும் இந்நாட்டின் சீர்கேடுகள் அல்லவா?

தென்பகுதியில் தற்போது இரு அரசுகள் செயற்படுவது யதார்த்தமாகும். அதனுடன் சேர்ந்து வடக்கில் அதிகாரபூர்வமற்ற அரசை நடத்தும் பிரபாகரன் இந்த வெள்ளப்பெருக்கு பிரச்சினையில் தாமும் இணைந்து 12லொறிகள் நிரம்பிய உணவுப் பொருள்களை இரத்தினபுரிப் பிரதேச வெள்ள அகதிகளுக்காக அனுப்பி வைத்துள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பினால் தென்பகுதி மக்களுக்கு உதவி கிடைப்பது இதுவே முதற் தடவையாகும்.

சமாதானப் பேச்சு இடைநிறுத்தப்பட்டதன் பின்னர், வடக்கு - கிழக்குப பிரதேசங்களில் புனரமைப்பு மற்றும் மீள் குடியமர்வு நடவடிக்கைகள் மூலம் தமது உரிமையை மேலும் நிலைநிறுத்திக்கொள்ள விடுதலைப்



புலிகள் முயற்சிக்கின்றனர். அவசர மனிதாபிமான உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு உருவாக்கப்பட்ட 'சிரான்' உபகுழுவுக்குரிய அதிகாரங்கள் போதுமானவையல்ல என்பது விடுதலைப் புலிகள் அமைப்பின் குற்றச்சாட்டாகும். அதே போன்று உலக வங்கியினால் நிருவகிக்கப்படும் புனரமைப்பு நிதியும் தேவைக்கு அதிகமான சட்டதிட்டங்களால் செயலற்றுப்போகும் என்பது அவர்களது மற்றொரு குற்றச்சாட்டாகும். இவற்றின் மூலம் தமக்கு அதிக அதிகாரங்களுடன் அவசர மனிதாபிமான உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் என அவர்கள எதிர்பார்ப்பது புலனாகின்றது.

## வீயெஸ்ரி

ரணில் விக்கிரமசிங்கவின் அரசு வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தற்காலிக இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்குவதாகக் கூறியே பதவிக்கு வந்தது. அதன் அடிப்படையிலேயே முதல் சுற்றுப் பேச்சுக்கள் அமைந்தன. ஆனால், ஜனாதிபதியின் பொ.ஐ.முன்னணி காட்டிய எதிர்ப்பின் காரணமாக அத்திட்டத்தைக் கைவிட நேர்ந்தது. சமாதானப்பேச்சில் மூன்று உபகுழுக்கள் இதனடிப்படையிலேயே உருவாக்கப்பட்டன. இயல்பு வாழ்க்கையை உருவாக்கும் நோக்கில் நிறுவப்பட்ட உபகுழுவின் செயற்பாடுகள் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையை' அடுத்து இடைநடுவில் நிறுத்தப்பட்டன. அரசியல் தீர்வு எட்டுவது தொடர்பாக நிறுவப்பட்ட உபகுழுவின செயற்பாடுகளும் செயலற்றுப் போயின. சமஷ்டி அமைப்புமுறை தொடர்பான எப்பேச்சுக்களும் அங்கு இடம்பெறவில்லை. மீதமிருந்த "சிரான்" அமைப்பு அவசர மனிதாபிமான உதவிகள். தொடர்பான நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்பட்டதாகும். அதுவும் தற்போது செயலற்றுப்போயுள்ளது.

தெற்கில் ஜனாதிபதி மற்றும் பிரதமரால் இருவேறு நிர்வாகங்கள் மேற்கொள்ளப்படும் விதத்தில் - வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடியதான விதத்தில் - இடைக்கால நிர்வாக அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் கோரிக்கை, டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று புலிகள் தீர்மானம் மேற்கொள்ளக் காரணமாக அ[illegible]ந்தது. தெற்கின் இருவித அரசுகள் [illegible]ல்லது இரட்டை அதிகாரத்தை வகபபோரால் விடுதலைப் புலிகள் அமைப்பின் இக்கோரிக்கை பரந்த அளவில் விவாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும். சமாதான எதிர்ப்பாளர்களான ஜே.வி.பியினருடன் இணைந்து, பிரதமரின் நிர்வாகத்திற்கு எதிராகச் செயற்படுவதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளும் நோக்கத்தை ஜனாதிபதியின் நிர்வாகம் கொண்டுள்ளது. தற்போது அரசியல் சிக்கல்கள் இடம் பெறவில்லை. உண்மையில் தற்போது இடம்பெறுவது இரகசிய வழியில் அரசியல் அதிகாரத்தில் மாற்றம் ஏற்படுத்த விளையும் கோழைத்தனமான முயற்சியே ஆகும்.

தென்பகுதி அரசியலில் இடம் பெறும் அதிகாரப் போட்டியை அவதானித்தவாறிருக்கும் பிரபாகரன் எது பற்றிச் சிந்திக்கிறார்? அவரது தலைமையிலான அமைப்புடன், பேச்சுகள் மூலமாக தீர்வுகாணும் வகையிலான துணிவுகொண்ட அரசியல் கலாசாரம் தென்பகுதி அரசியல்வாதிகளிடம் உள்ளதென அவரால் நம்ப முடியுமா? அபிவிருத்தி லொத்தர்சபை தொடர்பான பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள இயலாத ஓர் அரசினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென அவர் நம்புவாரா? மேலும் மேலும் சிக்கல்கள் அதிகரிக்கும் அரசியலில் மூழ்கிவரும் அதிகாரப்போட்டி மிக்க தென்பகுதி அரசுகளால் அரசியல் தீர்வொன்றினை எட்டமுடியுமென இந்நாட்டின் தமிழ் மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு ஏற்படுமென நம்புவது சிரமமானதே.

இந்த நிலைமையில், விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது தென்பகுதி அரசின் மீது கொண்டுள்ள விசுவாசத்தினால் அல்ல. அது நிலைமைக்கேற்ற வகையில் முன்னெடுக்கப்பட்டு. அதேவகையில் படிப்படியாக அற்றுப்போகவும் கூடும். கடைசியில் மிஞ்சுவது சர்வதேச சமூகத்தின் நெருக்குதல்கள், அவர்களது உதவிகள் மற்றும் வடக்கு - கிழக்குவாழ் தமிழ் மக்களின் சமாதானம் தொடர்பான எதிர்பார்ப்புக்களும் மட்டுமே. ஆயினும், அரசியல் தீர்வு நோக்கி பயணம் செய்ய வேண்டுமாயின் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கை உருவாக வேண்டும். ஆனால், அது தற்போது தொடக்கத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டியதொரு விடயமாகியுள்ளது.

நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சியை முதலில் இருந்தே ஆரம்பிப்பது சிலவேளை ஐ.தே.கட்சி அரசினால் முடியாதிருக்கக்கூடும் என விடுதலைப் புலிகள் அமைப்பு எண்ணவும் இடமுண்டு. ஸ்ரீல.சு.கட்சியுடனான ஜே.வி.பியினரின் கூட்டுடன் அதாவுல்லா தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவும் சேர்ந்துகொண்டால், ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு சிரமம் ஏற்படக்கூடும் என்பது தமிழர் கூட்டமைப்பின் கருத்தாகவுள்ளது. அது தவறான கருத்தாகும் எனக் கருத முடியாது.

தென்பகுதி அரசியல் அதிகாரத்தில் மாற்றம் ஏற்படுத்தி, ஜே.வி.பியினரின் உதவியுடன் ஸ்ரீ.ல.சு.கட்சி அரசொன்றை நிறுவுமாயின், அதுவே சமாதான நடவடிக்கைகளுக்கு கடைசி முடிவாக அமையும். அவ்வாறு நிகழுமாயின், விமல் வீரவன்ஸ முக்கிய அமைச்சுப் பதவியொன்றினை வகிப்பதற்கு இடமேற்படும். தப்பித்தவறி அவருக்கு நீதி அமைச்சோ அல்லது உள்நாட்டு விவகார அமைச்சோ வழங்கப்பட்டால், இந்நாட்டில் உள்ள வெளிநாட்டு உயர் ஸ்தானிகர்களில் பலர் ஒன்றில் கைதுசெய்யப்படுவர் அல்லது நாட்டைவிட்டு வெளியேற்



றப்படுவர். ஸ்ரீலங்காவின் இறைமையில் தலையிடுவதாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் மீது ஏற்கனவே அவர் பாரதூரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்துள்ளார்.

ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. கூட்டரசினால் சமாதான நடவடிக்கைகளில் பெறுமதியானதும், பலம் வாய்ந்ததுமான பங்களிப்பினை வழங்கிவரும் சர்வதேச சமூகம் புறம் தள்ளப்படும். அவ்வேளையில், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு சமாதான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்கான காலம் தொடர்பான பிரச்சினை மட்டுமே உருவாகும்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தனது அதிகாரத்தை உறுதி செய்வது தொடர்பான பிரபாகரன் அரசினது நடவடிக்கைகளை நாம் இந்த அடிப்படையிலேயே நோக்கவேண்டும். தனக்கு எதிரான அரசியல்வாதிகளை ஒவ்வொருத்தராக அழிப்பதன் மூலம் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்தியும், விரிவுபடுத்துவதன் மூலமும் எல்லாவற்றுக்கும் மேலாக, தனிப்பட்ட அரசியல் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வரும் அவர், எந்த நிலைமையையும் எதிர்கொள்ளத் தயாரான நிலையிலுள்ளார்.

ஸ்ரீலங்காவின் வரலாற்றில் முதற்றடவையாக மூன்று அரச நிர்வாகங்கள் சமமான நிலையில் இயங்க ஆரம்பித்துள்ளன. இந்த நிலையிலிருந்து மீள்வதற்கு சிக்கல்கள் கொண்ட அரச நிர்வாகங்கள் எவ்வித முயற்சிகளிலும் ஈடுபடமுடியாதுள்ளன. வடக்கு - கிழக்குக்கும் தென்பகுதிக்கும் இடையேயான சமாதானமும் சகவாழ்வும் பழைய கதையாவது போன்று, தென்பகுதி அரசியலிலும் அமைதி நிலவுவதை விட அவசரம் மிகுந்திருப்பதற்கு இதுவே காரணமாகும். இதுவே, இன்று சமாதான நடவடிக்கைகளில் இம் மூன்று தரப்பினரும் ஒன்றிணைந்து ஈடுபட வேண்டியிருப்பதற்கான அவசியமாகிறது. ◆




இலங்கை வானொலியின் யாழ்.எவ்.எம். சேவைப்பிரிவு, சமீபத்தில் யாழ்.மத்திய கல்லூரியில் நடத்திய நேயர் சந்திப்பின்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் வி.என். சிவராஜா மற்றும் யாழ்.சேவை அறிவிப்பாளர்கள், நேயர்களுடன் உரையாடிய போது எடுக்கப்பட்ட படம். யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் ந.வி.மு.நவரட்ணமும் காணப்படுகின்றார்.

## யாழ். மாவட்ட
## பேக்கரி உரிமையாளர் சங்கம்
## பேக்கரி உரிமையாளருக்கான கலந்துரையாடல்

பேக்கரி உரிமையாளருக்கு இன்று (11-06-2003) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் பிறீமா நிறுவனத்தினரால் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடத்தப்படும் பயிற்சிநெறி சம்பந்தமான கலந்துரையாடலில் தவறாது பங்குகொண்டு பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

*559,நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-28356) - நிர்வாகம்.



## ஊரெழு கிழக்கு ஞானவயிரவர் ஆலயம்
## புனருத்தாருண அடிக்கல் நடும் விழா

நிகழும் சுபானு வருடம் வைகாசி மாதம் 28ஆம் நாள் இன்று (11-06-2003) புதன்கிழமை பகல் 10 மணிக்குமேல் வரும் சுபவேளையில் ஞானவயிரவர் ஆலயத்தின் புனருத்தாருண அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வில் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி. மகேஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பிப்பார். அத்தருணம் அடியார்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

*ஊரெழு, கிழக்கு.* (19004) பரிபாலனசபை, ஞானவயிரவர் ஆலயம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 1932 - 04 - 16



இறப்பு 2003 - 05 - 03

திருமதி

### சுப்பிரமணியம் தங்கரத்தினம்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (12.06.2003) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இன்பருட்டி மடத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டி நிற்கின்றோம். அ. நடராசா, மருமகள் சந்திரலேகாமணி(இந்தியா), *பேரன்மார்:* விஜயகுமார்(இந்தியா), தெய்வகுமார், சிவகுமார், சசிகுமார்(இத்தாலி), ராசகுமார் (லண்டன்), செல்வரயனி (லண்டன்), *பூட்டன:* நரேஸ்(லண்டன்), உதயகுமார்(சுவிஸ்), *மனைவி* உதயகுமாரி(சுவிஸ்), *பேர்த்தி* வளர்மதி, *கணவன்* விவேகானந்தன், *பூட்டன்* தினேஷ், ஆகாஸ், *பூட்டி* கீர்த்தனா (லண்டன்), மூத்தமகள் புனிதவதி, மருமகன் சூரியமூர்த்தி, *பேரப்பிள்ளைகள்* தவேந்திரராசா, ஜெகன், சுபாஜினி, சுஜாதா, சுதாகர், கல்யாணி, *பூட்டப்பிள்ளைகள்:* கிசோ, கபில், கீர்த்தனா, அனிற்றா, சந்தியா, தர்சன். தயாணி, விதுசன்.

*இரண்டாவது மகள்* வண்ணக்கிளி, மருமகன் திருமுருகன்(பிரான்ஸ்) *பேர்த்திமார்:* வனி திவ்வியா தாரணி(பிரான்ஸ்).

*மூன்றாவதுமகள* ஜீவாதேவி, மருமகன் சாந்தகுமார், *பேரப்பிள்ளைகள* பிரதீபன், பிரசாந்தினி, சிந்தியா, சகோதரி தவமணி, கணவன் தங்கராசா *பெறாமக்கள* சரோஜினிதேவி, சுசீலாதேவி ஆகியோர் அன்னாரின் ஆத்மாசாந்தி பெற இறையருள் வேண்டிநிற்கின்றனர்.

*இன்பருட்டி,*
*பருத்தித்துறை.* (19005) தகவல்: குடும்பத்தினர்

## 'பொப்லெப்' திட்டத்தில் நூல்கள் விநியோகம்

மண்டைதீவு,ஜூன்11

மாகாணக் கல்வியமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 'பொப்லெப்' திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி நூல்கள் சகல கல்வி வலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நூல்கள் யாவும் அந்தந்த கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன. தீவக வலயத்தில் தம்பாட்டி வித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம், மண்டைதீவு மகாவித்தியாலயம் ஆகிய பாடசலைகளுக்கு இந்நூல்கள் வழங்கப்படவுள்ளன.

(ஓ-10-88)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூன்11

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகில் உள்ள சங்க மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

*ஆண்கள்*

பிற்பகல் 3 மணி - நாயன்மார்கட்டு பாரதி வி.க. எதிர் நீர்வேலி ஐக்கிய வி.க.

அச்சுவேலி நவேதயா வி.க. எதிர் பாஷையூர் சென் அன்ரனீஸ் வி.க.

பிற்பகல் 4 மணி - மட்டுவில் மோகனதாஸ்வி.க.எதிர் இளவாலை இளஞ்சுடர் வி.க.

அரியாலை ஐக்கிய வி.க. எதிர் அரியாலை திருமகள் வி.க.

*பெண்கள்*

மாலை 5 மணி - ஆவரங்கால் மத்திய வி.க. எதிர் பருத்தித்துறை ஐக்கிய வி.க. (ஓ-5-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்11

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறும் கால் இறுதி ஆட்டத்தில் கழுகுகள் வி.கழகமும், ஸ்பேர் வி.கழகமும் மோதவுள்ளன. (ஓ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்11

துணைவி அமி.த.க. பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு 'சென்ஸ்ரார்' விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் கா. சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில் சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளர் சி. செல்லையா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (ஓ-5)


### தவறிவிட்டது

Dr.P. றொபின்சன் என்பவரின் பல்கலைக்கழக சான்றிதழ் ஒன்று 08.06.2003 ஞாயிறு இரவு திருநெல்வேலிச் சந்திக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். போதனா வைத்தியசாலை விடுதி-30 இல் ஒப்படைக்கவும். T.P 6087 சன்மானம் வழங்கப்படும். (19007)



எந்திரியாவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

City & Guilds

Telecom.& Electronics Engineering
Electrical & Electronic Engineering
- Diploma & Adv. Diploma Level -

Telecommunication Systems

Certificate Level Only

ADVANCED DIPLOMA ENABLE TO DIRECTLY ENTER THE GRADUATE DIPLOMA (PART II) CEI U.K. & ONE TO TWO YEARS EXCEMPTION FROM MANY U.K. UNIVERSITIES.

Short Course: செய்முறைப்பயிற்சிகளுடன்
Computer Hardware Engineering
Duration: 3 Months, Course Fee: Rs.3000/=

Course Director: K.Chandirabose, I.Eng,MIIE

Commencing On 01.07.2003

விக்னா கல்வி நிலையம்
52,ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம் (18996)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 - 10 - 1946



உதிர்வு 23 - 05 - 2002

### திருமதி இராசமலர் மார்க்கண்டு

அன்பு மொழி பேசி ஆதரவாய் வழிகாட்டி
இன்ப வாழ்வு வாழ வழிவகுத்த அம்மாவே!
ஆண்டு பல சென்றாலும் ஆறாது எம்முள்ளம்
என்றும் உமை நினைத்தே இவ்வுலகில் வாழ்கின்றோம்!
பூவோடும் பொட்டோடும் எங்கு சென்றீர்கள்.

இன்று (11-06-2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*"அன்புநிழல்"*
*கே.கே.எஸ் வீதி,* (19000)
*இணுவில் கிழக்கு,*
*மருதனார்மடம்.*

என்றும் அவர் நினைவில் வாழும் கணவர், பிள்ளைகள்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக எழுதுநர்
**திருமதி இராஜலெட்சுமி ஸ்ரீஸ்கந்தராசா** அவர்களின்
பாசமிகு தாயாரும்
பிரதேச செயலக அலுவலா திரு.ம.சிவனேசன் அவர்களின்
பாசமிகு பேர்த்தியுமான

### திருமதி சாந்தலிங்கம் முத்தம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தீவுப்பகுதி தெற்கு*
*பிரதேச செயலகம்.*
*வேலணை.* (சி/28251) -பிரதேச செயலக நலன்புரிச்சங்கம்

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசரத்தினம்

*(தவில் வித்துவான்)*

நல்லூர், வடக்கு வீதி கந்தையா இராசரத்தினம் (தவில் வித்துவான்) அவர்கள் 10.06.2003 செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜானகி அவர்களின் அன்புக் கணவரும் குருசாமி, யசோதரன், சிவசாமி (கனடா), கோகிலமணி, தர்மவதி, மஞ்சுளாதேவி, முருகதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மாதவி, பிறேமா(ந்தி), பேபி, மகேந்திரன், ஜெயம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2003) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நல்லூர் கோயில் வடக்கு வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லூர் வடக்கு வீதி,*
*நல்லூர்.* (18993)

தகவல்: இ.ஜானகி *(மனைவி)*

## நெஞ்சகலாது நினைவஞ்சலி

16ஆம் ஆண்டு



### தியாகராஜா இராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

12ஆம் ஆண்டு



### இராஜசிங்கம் இராஜமனோகரன்

(பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர்)

| | | |
|---|---|---|
| 22.04.1901 ← | தோற்றம் | → 07.07.1934 |
| 08.06.1987 ← | மறைவு | → 25.05.1991 |

திதி : பூர்வபக்க ஏகாதசி

திதி : பூர்வபக்க துவாதசி

*'இராஜகிரி',*
*காசிப்பிள்ளையார் கோயிலடி, தெல்லிப்பழை.*

- குடும்பத்தினர்.

# வடக்கு - கிழக்குக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டோக்கியோ மாநாட்டின் நோக்கம், இலங்கை சமாதான நடைமுறையின் வரலாறு, சமாதான நடைமுறையை ஊக்குவிப்பதில் மாநாட்டின் முக்கியத்துவம் ஆகியவை குறித்து விவரித்துள்ள டோக்கியோ பிரகடனம், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாமை குறித்து கவலை தெரிவித்திருக்கிறது.

பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஏனைய முக்கிய விடயங்கள் வருமாறு:-

சமரச சமாதான நடைமுறை மீதான விடுதலைப் புலிகளின் உறுதிப்பாட்டை மாநாடு வரவேற்கிறது. கூடிய விரைவில் சமாதானப் பேச்சுகளுக்குத் திரும்புமாறு அது புலிகளைக் கோருகிறது. வடக்கு, கிழக்கின் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்கள் சமாதானத்தின் பலாபலன்களை விரைவில் அனுபவிக்கக் கூடியவர்களாக இருப்பர்.

நிரந்தர, நியாயமான அரசியல் தீர்வு மனித உரிமைகளை, ஜனநாயகத்தை, சட்டத்தின் ஆட்சியை கௌரவிப்பதன் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இவ்விடயம் தொடர்பாக, ஹக்கோனில் நடைபெற்ற ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுக்களில் ஆராயப்பட்டவாறு மனித உரிமைகள் பிரகடனம் குறித்து துரித உடன்பாடொன்றை இரு தரப்பினரும எட்டுவதைக் காண மாநாடு விரும்புகிறது.

சமாதானப் பேச்சுக்கள் பற்றிய கடந்த சுற்றுப் பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டதை மாநாடு அவதானிக்கிறது. ஒஸ்லோ பிரகடனத்தில் பிரதிபலிக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையிலான சமாதான நடைமுறைகளை மேலும் ஊக்குவிக்கும் முயற்சிகளை இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மேற்கொள்ளும் முக்கியத்துவத்தை உதவி வழங்கும் நாடுகள ஞாபகப்படுத்துகின்றன. வடக்கு, கிழக்கின் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மக்களுக்கு ஆதரவளிக்கும் அவசர தேவைகளையும், இந்த தேவைகளுக்காக நிதி ஒதுக்கப்படுவதையும் உதவி வழங்கும் நாடுகள் ஒப்புக்கொள்கின்றன. வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளின் பங்களிப்புடன் செயற்படும் அரசாங்கத்தின் மூலம் திட்டங்களை நிறைவேற்றுவது மேற்கொள்ளப்படும். சகல சமூகத்தவர்களினதும் நலன்கள் குறித்து போதிய பாதுகாப்புகளுடன் இது நடைபெறும். வடக்கு, கிழக்கு புனரமைப்பு அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த உதவிகள் அந்த தேவைகளுக்கே பயன்படுத்தப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென டோக்கியோ மாநாடு எதிர்பார்க்கின்றது.

சமாதான நடைமுறைகளின் முன்னேற்றத்துடன் உதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவி தொடர்புபட்டிருக்கும் மாற்றத்துக்கு இடைப்பட்ட காலத்தில் புனரமைப்பு, அபிவிருத்தி விடயங்களை நிர்வகிக்க தற்காலிக நிர்வாக கட்டமைப்பு குறித்து கூடிய விரைவில இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சு நடத்தவேண்டும். பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய இறுதி அரசியல் தீர்வுக்கான மார்க்கத்தை தெளிவாக உணர்த்தும் வீதி வரைபடம் ஒன்று விரைவாக உருவாக்கப்படுவது இந்த இடைப்பட்ட கால நடைமுறைக்கு தேவையானதாகும். இதன் காரணமாக சமாதான நடைமுறையின் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்யவும் கண்காணிக்கவும் சர்வதேச சமூகம் உத்தேசித்துள்ளது. பின்வரும் விடயங்கள் அவற்றில் அடங்கும்.

இரு தரப்பினரும் போர்நிறுத்த உடன்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல், வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான நிர்வாக அமைப்பை ஆக்கபூர்வமாக ஏற்படுத்துதல், தாய்லாந்தில் நடைபெற்ற நான்காவது சுற்று சமாதானப் பேச்சு அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு முஸ்லிம் பிரதிநிதிகளின் பங்குபற்றல், ஆயுத மோதலால் இடம்பெயர்ந்தோர் பிரச்சினைகளுக்குத் தீர்வு, சகல மக்களினதும் மனித உரிமைகளை ஊக்குவிப்பது, பாதுகாப்பது, ஆயுத மோதலால் உள அல்லது உடல் ரீதியாக ஊனமுற்ற வடக்கு, கிழக்கிலுள்ள முன்னாள் போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் புனர்வாழ்வளித்தல், அரசியல் தீர்வொன்று எட்டப்படும் சந்தர்ப்பத்தில் பொருத்தமான ஒரு நேரத்தில் அரசும் விடுதலைப் புலிகளும் கட்டம், கட்டமாக சமமாக படைகுறைப்பையும் வழமை நிலையை ஏற்படுத்தும் நடைமுறையையும் மேற்கொள்ள இணங்குதல்.

- இவ்வாறு டோக்கியோ பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
மயில்வாகனம்
நாகபூரணம்

திதி: 11.06.2003

பொஸ்கோ,
252,பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

(C/28364)


## திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் வைகாசி மாதம் 28ஆம் நாள் (11.06.2003) புதன்கிழமை பிற்பகல் 1.29 மணி முதல் 2.17 வரையுள்ள சுப முகூர்த்தவேளையில்

**மஹாலட்சுமி உணவகம் அன் குளிரகம்**

புதிதாக ஆரம்பிக்க இறைவன் திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோண்டாவில் வீதி,
இருபாலை சந்தி.

K.றமேஸ்
(மஹாலட்சுமி உரிமையாளர்)

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்) (19021)


உ

தொண்டமனாறு
## ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் தேர்த்திருவிழா

அம்பிகை அடியார்களே!

அம்பிகையின் தேர்த்திருவிழா 13.06.2003 வெள்ளிக்கிழமை நடைபெறும்
பிற்பகல் 1.00 மணிக்கு - வசந்தமண்டப பூஜை
பிற்பகல் 2.30 மணிக்கு - அம்பிகை தேரில் ஆரோகணித்தல்
விசேட மங்கள இசை: L.S.ஜெயநாதன் குழுவினர்(உடுப்பிட்டி)
மஹோற்சவ பிரதம குரு :
கிரியா கலாமணி சிவஸ்ரீ க.நாகேஸ்வரக் குருக்கள்
(சிவன் கோவில் - எழுதுமட்டுவாழ்)
அடியார்கள் வருக! அம்மன் அருள் பெறுக !!

(சி-28357) -ஆலய பரிபாலன சபையினர்.


## புதுக்கடை திறப்பு விழா

இன்று (11.06.2003) புதன்கிழமை மாலை 4.22 மணி தொடக்கம் 5.52 வரையான சுபநேரத்தில் இல.1011. K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் எமது வியாபார ஸ்தாபனம் ஆகிய

**K.D.M. TECHNOLOGIES**

ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதால் அந்நிகழ்வில் அன்பர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதல் தரமான செல்லிடத் தொலைபேசி மற்றும் அதன் உதிரிப்பாகங்கள்

சகலவிதமான வீடியோ CDகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம் **K.D.M.TECHNOLOGIES**

(உரிமையாளர்:இ.குணராஜா)
1011, K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்,
(மில்க்வைற் அருகில்)
T.P.021.222 3521
mobile: 0777 492619

(19022)


## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர்கள் திரும்பிச் சென்றார்கள்.

மனிதாபிமான அடிப்படையில் அவசர சிகிச்சைப்பிரிவு, சத்திரச் சிகிச்சைப் பிரிவு, வார்ட்டுக்களில் மட்டும் டாக்டர்கள் பணிபுரிந்தனர்.

வேலைநிறுத்தம் இன்றும் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்க மருத்துவர்களின் வேலைநிறுத்தத்தால் நாடெங்கிலும் உள்ள பொது வைத்தியசாலைகள் அனைத்தும் நேற்று ஸ்தம்பிதம் அடைந்தன. இதனால் சிகிச்சை பெற வைத்தியசாலைக்கு சென்ற பல்லாயிரக்கணக்கான நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாயினர்.

கொழும்பு, கண்டி, காலி, இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, உட்பட சகல வைத்தியசாலைகளிலும் இந்த வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. எது எவ்வாறாயினும் அவசர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன கூறியவாறு சம்பள முரண்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்கும் வரை இந்த வேலைநிறுத்த போராட்டம் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இன்று முதல் சகல மாவட்ட வைத்திய சாலைகளிலும், ஏனைய பிரதேச வைத்திய சாலைகளிலும் கடமையாற்றும் டாக்டர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் பங்கு கொள்ளவிருக்கின்றனர்.

நாம் மனிதர்களின் உயிருடன் விளையாடவில்லை. மறுக்கப்பட்டு வரும் எமது உரிமைகளுக்காகவே போராட்டம் நடத்துகிறோம் என்று மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் சில்வா கூறினார்.

(ஐ-3-5-15-139-17)


**லக்ஷ்மி சினிமா** இணுவில்



விஜய், சினேகா மற்றும் பலர் நடிப்பில்
**வசீகரா** (பிலிம்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(18926)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சரத்குமார் (இருவேடம்) தேவயானி, ஆனந்தராஜ் நடித்த
**சூரிய வமசம** (பிலிம்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே)
அடுத்த வெளியீடு 'கீதை'

**ராஜா** யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
அஜித், வசுந்தராதாஸ், நக்மா, மீனா நடித்த
**சிட்டிசன்** (பிலிம்)
2.30, 6.30 மட்டும்
THE ROCK THE SCORPION KING
காலை 10.30, இரவு 9.30 மட்டும்
(C/28324)

**லிபேட்டி** அச்சுவேலி



அஜித், கிரண், மீனா, ரமேஷ்கன்னா நடித்த
**வில்லன்** (பிலிம்)
காட்சி நேரம்11.00, 3.00,7.00
(புதிய நேரம்)

**நிறைஞ்சனாஸ்**
விஜய், ஷாலினி, ராதாரவி நடித்த
**காதலுக்கு மரியாதை** (பிலிம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
BEHIND ENEMY LINES


## வெளிவாரிப்பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்11

யாழ்.பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படவிருந்த வெளிவாரிப் பரீட்சைகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருந்த கலைமாணி பகுதி II-2001 பரீட்சையும்,எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி நடைபெறவிருந்த கலைமாணி பகுதி I-2001 பரீட்சையும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ் பல்கலைக்கழக வெளிவாரி பதிவுகள் பரீட்சை அலகு அறிவித்துள்ளது. (ஐ-8)

## கூட்டம்

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை பி.ப. 2.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் பிரதேசசெயலாளர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதேசத்திலுள்ள பின்வரும் அரச, கூட்டுறவு, உள்ளூராட்சி திணைக்கள அலுவலகங்களின் தலைவர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மீள் குடியமர்த்தல்,சுகாதாரம், கல்வி, உள்ளூராட்சி, சூழல் பாதுகாப்பு,வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மின்சாரம், வீடமைப்பு, கிராமிய அபிவிருத்தி, சிறுகைத்தொழில், கூட்டுறவு, கடற்தொழில், போக்குவரத்து, கலால், பனைஅபிவிருத்தி சிறுவர் பாதுகாப்பு ஆகியவற்றின் பிரதி நிதிகளும்,அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)


**IBM Branded கணனிகள்**



PERSONAL COMPUTER
Intel Pentium 4 1.8GHz/2.4GHz
NOTEBOOK / LAPTOP
Intel Pentium 4 2.4GHz
Intel Celeron 1.1GHz
3 வருட உதிரிப்பாக உத்தரவாதம்
100 % பரீட்சிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள்
கணனிகள் திருத்திக் கொடுக்கப்படும்.

**MICRO PC SYSTEMS**
வெள்ளவத்தை 15, 36th Lane, Col-6 ✆ 074-516764
கொட்டாஞ்சேனை 82, New Chetty St, Col-13. ✆ 074-613617
யாழ்ப்பாணம் 175/3, கஸ்தூரியார் வீதி ✆ 021-222 5893


## கும்பாபிஷேக தின விழா

ஈச்சமோட்டை கலட்டிபுலம் ஞான வைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேக விழா இன்று புதன்கிழமை நடைபெறும்.

காலை 9 மணிக்கு விஷேட சங்காபிஷேகமும், மாலை 4 மணிக்கு சுவாமி உள்வீதி வலம் வருதலும் இடம்பெறும்.

அத்துடன் 5 மணிக்கு வைகாசி பொங்கல் விழாவும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன செயலாளர் கே.மோகனச்செல்வன் தெரிவித்தார். (ஐ-17)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**இலங்கை**
**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

*அறிவித்தல்*

கலைமாணி பகுதி II -2001
தேர்வு (வெளிவாரி)
கலைமாணி பகுதி I -2001
தேர்வு (வெளிவாரி)

16.06.2003 இல் நடைபெறவிருந்த கலைமாணி பகுதி II -2001 பரீட்சையும் 01.07.2003 இல் நடைபெறவிருந்த கலைமாணி பகுதி I -2001 பரீட்சையும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(சி-28361) பதிவாளர்
10.06.2003

**யாழ்ப்பாணம்**
**பல்கலைக்கழகம் - இலங்கை**
**உடற்கல்வி டிப்ளோமா பரீட்சை**
**2002/2003**

உடற்கல்வி டிப்ளோமா முதலாம், இரண்டாம் வருடப் பரீட்சைகள் எதிர்வரும் 02.07.2003 இல் ஆரம்பமாகும்.

மீள்பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்துக்கு ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையிலோ அல்லது நிதியாளர், யாழ். பல்கலைக்கழகத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பப் படிவங்கள் 11.06.2003 இல் இருந்து உடறகல்வித்துறை, யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இணைப்பாளர், உடற்கல்வித்துறை அவர்களிடம் 23.06.2003 ஆம் திகதிக்கு முன்பாகச் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(சி-28360) பதிவாளர்
10.06.2003

## மரண அறிவித்தல்கள்

### செல்வி ம. கண்ணகை (நீற்றா)

*(ஓய்வுபெற்ற தாதி,யாழ் போதனா வைத்தியசாலை)*

மண்டைதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சென்னையை வதிவிடமாகவும் கொண்டவருமான செல்வி ம. கண்ணகை (நீற்றா) அவர்கள் 9-6-2003 திங்கட்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதர்-சொர்ணம் தம்பதியினரின் அன்பு மகளும் செல்லாச்சி,விசாலாட்சி,தங்கமேனி,இராமையா, அமிர்தமணி,பூமணி,யோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை.கணபதிப்பிள்ளை
*(மைத்துனர்)*

*268,பலாலி வீதி,*
*கந்தர்மடம்.*

(19010)

### சபாபதி நல்லையா

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சபாபதி நல்லையா நேற்று (10.06.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தளையசிங்கம், யோகசிங்கம், ஜெயபாலன், சுதந்திரராஜா, ஆனந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசமணி, மாலினி,தேவகி, விஜயராணி,உஷா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2003) புதன்கிழமை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலடி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

தகவல்:
பேரப்பிள்ளைகள்.

(19020)

## நல்லூர் கொலை: சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஜுன்11

நல்லூர் முத்திரைச்சந்திப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது சகோதரனை அலவாங்கினால் தாக்கிக் கொன்றவர் எனக்கூறப்படும் நபர் நேற்று யாழ்.பொலீஸாரினால் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை முரளிதரன் என்பவரே நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். இவரை எதிர் வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (ஐ-8)

## இந்தியாவிலிருந்து கண்ணி அகற்ற குழு வருகை

வவுனியா,ஜுன்11

வவுனியா மாவட்டத்தில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபடுவதற்காக இந்தியாவில் இருந்து பத்துப் பேர் கொண்ட இரண்டாவது குழு நேற்று வவுனியா வந்துசேர்ந்தது.

மன்னார் - வவுனியா வீதியில் குருக்கள் புதுக்குளம் பகுதியில் இக குழு கண்ணி அகற்றும் பணியில் ஈடுபடும்.

ஏற்கனவே வந்த மற்றொரு இந்தியக்குழு சாளம்பைக்குளப் பகுதியில கண்ணி அகற்றும் பணிக்கான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (ஐ-3-164)

## சடலம் ஒப்படைப்பு!

குளத்தில் மூழ்கி மரணமானதாகத்தெரிவித்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வேலணை, 4 ஆம் வட்டாரத்தைச சேர்ந்த கணபதிப்பிள்ளை முத்துலிங்கம்(வயது77) என்பவரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

9 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. இதனால் அந்த அலுவலகத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

கிரனேட் வீசப்பட்ட சமயம் ஈ.பி.டி.பி. அமைப்பின் திருமலை மாவட்டப் பொறுப்பாளர் உட்படப் 18 பேர் அந்த அலுவலகத்தில் தங்கி இருந்தனர். எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (ஐ-3)

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் வந்த இருவர் பிஸ்ரலால் இவரை சுட்டுவிட்டு தப்பிவிட்டனர் என்று கூறப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் வவுனியாவில் இடம்பெற்ற 4 ஆவது கொலைச் சம்பவம் இதுவாகும். (ஐ-3-164)

# மட்டக்களப்பில் மீண்டும் புலிகளின் அரசியல் பணி

மட்டக்களப்பு,ஜுன்11

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் தமது அரசியல் பணிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

அரசியல் பயிற்சி வகுப்பு ஒன்றுக்காக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் பணியாற்றிய தமது போராளிகளை தமது பிரதேசத்துக்கு கடந்த 15 ஆம் திகதி புலிகளின் கிழக்கு தலைமை அழைத்திருந்தது.

அந்த பயிற்சிகள் யாவும் பூர்த்தி அடைந்ததை அடுத்து கடந்தவாரம் மீண்டும் அவர்கள் தமது அரசியல் பணிகளை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆரம்பித்துள்ளனர்.(ஐ-3)

# டோக்கியோ உதவும் மாநாடு முஸ்லிம்களுக்கு வெற்றி

### அமைச்சர் ஹக்கீம் கூறுகின்றார்

டோக்கியோ மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நிகழ்த்திய உரையில் முஸ்லிம் குழு ஒன்று சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டியது முக்கியமானது என்று குறிப்பிட்டார். இது முஸ்லிம்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் தருகிறது என்றார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அரச குழு உறுப்பினர்களில் ஒருவருமான அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

மாநாட்டின் இறுதிக் கூட்டறிக்கை வெளியிடப்பட இருக்கிறது. அதிலும் முஸ்லிம்களின் குழு சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட இருக்கிறது. இது முஸ்லிம்களாகிய எங்களுக்கு கிடைத்த வெற்றி என்றே நான் கருதுகிறேன் என்றும் ஹக்கீம் சொன்னார்.

# விபத்தில் சிக்கினார் ஜெயராஜ் எம்.பி. அவருக்குக் காயம்;இன்னொருவர் பலி!

புத்தளம்,ஜுன்11

கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பயணம்செய்தார் என்று கூறப்படும் வாகனம் விபத்துக்குள்ளானதில ஓட்டோச் சாரதி ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று மாலை புத்தளம் - குருநாகல் பகுதியிலுள்ள 4ஆம் மைல் அருகே அமைந்துள்ள கல்மாடி என்னும் இடத்தில் இடம் பெற்றது.

குருநாகலிலிருந்து வந்து கொணடிருந்தாகக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனம்,ஓட்டோவுடன் விபத்துக்குள்ளானது.

நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அவரது சாரதிக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன.

உயிரிழந்த ஓட்டோ சாரதியான ஏ.குணசிறி (வயது 48) என்பவரின் சடலம் புத்தளம் தள வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டு மாவட்ட வைத்தியர் எம். பரீத்தினால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

சிறு காயங்களுக்குள்ளான நாடாளுமன்ற உறுப்பினர் சிகிச்சையின் பின் வீடு திரும்பினார்.

இச்சம்பவம் குறித்து புத்தளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலீஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

# சிறந்த விவசாயிகள் தெரிவு: விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜுன்11

யாழ்குடாநாட்டில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளில இந்த ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள கௌரவிக்கப்படவுள்ளனர்.


விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் போதனாசிரியர்களிடம் அவற்றை ஒப்படைக்குமாறு உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை கேட்டுள்ளார்.

போட்டியில் பங்குகொள்வோர் கடந்த ஆண்டுகளில் சிறந்த விவசாயிகளுக்கான போட்டியில் பங்கு கொண்டு பரிசில் பெறாதவர்களாக இருக்க வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

விவசாயிகளிடையே தொழில் நுட்ப அறிவையும் திறனையும் விருத்தி செய்யும் நோக்கில் இந்தப் போட்டியை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. (3-10)



ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் திருமதி யோக்கோ கவகாச்சியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கைலாகு கொடுக்கும்போது எடுக்கப்பட்ட படம்.



ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவர் ரடோ சினோவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கைலாகு கொடுக்கும் போது எடுக்கப்பட்ட படம்.

## அனைவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்து, அதனை ரத்துச் செய்வதற்கு புலிகள் 'பிளாக் மெயில்' செய்தார்கள். ஆனால், அதற்கு ஜப்பான் எடுபடவில்லை. புலிகளின் மிரட்டலுக்கு இடம் கொடுத்து ஜப்பான் இந்தக் கூட்டத்தை ரத்துச் செய்திருந்தால் இலங்கையில் வாழும் சுமார் இரண்டு கோடி மக்களும் பாதிக்கப்பட்டிருப்பார்கள்.

சமாதான முயற்சிகள் மூலம் எட்டப்படும் அமைதித் தீர்வினால் அனைத்துத் தரப்பினருக்கும் சுபீட்சம் கிடைக்க வேண்டும். அனைவரினதும் மனித உரிமைகள் மதிக்கப்படும் நிலையும், அனைவரும் கௌரவமாக வாழும் சூழ் நிலையும் உருவாகவேண்டும்.

புலிகள் தங்கள் விரக்திகளை கூறிக்கொண்டு விலகி நிற்பதில் பயனில்லை. அவர்கள் சமாதானப் பேச்சு மேசைக்கு வந்து அவற்றைத் தெரிவித்து, அவற்றுக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும்.

- இவ்வாறு ஆர்மிடேஜ் குறிப்பிட்டார்.

கூட்டத்தின் இறுதி அமர்விலும் செய்தியாளர் மாநாட்டிலும் உரையாற்றிய ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி ஆகாஷி, நோர்வே வெளி விவகார அமைச்சுச் செயலாளர், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் போன்ற பலரும் விடுதலைப் புலிகள் விரைந்து பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தினர். (ஐ-3)

## டோக்கியோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேயின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் இதை விளக்கினார்.

செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய நோர்வே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தமது நாடு உதவி வழங்கும் நாடு என்ற முறையிலேயே இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுகின்றது எனவும் -

இந்தக் கூட்டத்தில் புலிகள் கலந்துகொள்ளாததால், தாங்கள் அனுசரணையாளர்கள் என்ற கோதாவில் பங்குபற்றவில்லை என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் யசூஷி அகாஷியிடம் கேட்கப்பட்டது.

கடன் எவ்வளவு, உதவு தொகை எவ்வளவு என்பது தனித் தனியாகப் பிரித்து இன்னும் கணக்கிடப்படவில்லை எனவும், தவிரவும் வடக்கு - கிழக்குக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதும் தனியாக இன்னும் பிரித்து கணக்கிடப்பட வில்லை எனவும் - அவர் பதிலளித்தார். (ஐ)


## மூன்று பிரதிகள் இலவசம்!

புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு!
எமது ஸ்தாபனத்தில் பிரதியாக்கம் செய்யும் எந்தவொரு படச் சுருளுக்கும் மூன்று இலவச புகைப்பட பிரதிகளை வழங்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொனிக்கா கலர் லாப் & ஸ்ரீ டியிற்றல் கலர் லாப்,
இல.14,ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோவில் அருகில்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 3493
(C/28363)

## இந்திய பரம்பரை ஜோதிடர்

அருள்வாக்கு அம்பிகா அம்மா

மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.

உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.
உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.

அம்மாவைச் சந்திக்கும் இடம்:-
அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்,
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்ரீமுருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.
(18936)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆய்வுக்கட்டுரைகளுக்கு
Tyresetting with Printing (Laser)
பக்கத்திற்கு
ரூபா 28
இச்சலுகை 15-06-2003 வரை மட்டுமே
MCS
324, Palaly Road,
Jaffna.

COMPUTER COURSES
Batch III June 14th 2003
Time: 10.00 a.m.
பிரிவு III இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மாணவர்களின் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.
இயக்குநர்,
IIS,
யாழ்ப்பாணம்.
(சி-28348)


## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகம் நாகம்மா

நுணாவில் சந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் நாகம்மா 10.06.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும் மங்கையர்க்கரசி( நெசவு ஆசிரியை), யோகவதி, புஸ்பமலர் (மருத்துவமாது, சாவகச்சேரி), மனோன்மணி, இன்பராணி, தெய்வேந்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் சண்முகநாதன், கனகசபை, கிருஷ்ணமூர்த்தி(காவலாளி,மகளிர் கல்லூரி, சாவகச்சேரி), சண்முகலிங்கம் (பாலா ஸ்ரோர்ஸ், மட்டுவில்), தவமலர் ஆகியோரின் மாமியாரும் குணசேகரம் (கனடா), மயிலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2மணியளவில் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.தெய்வேந்திரா (மகன்)
(தம்பிமாமா)

நுணாவில் சந்தி,
நுணாவில்.
(C28365)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நலன்புரி நிலையங்களின் அவலங்களை எடுத்துக்கூற செய்தியாளர் மாநாடு

வலி.வடக்கு,ஜூன்11

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் பல இன்னல்களுக்கிடையே தங்கியுள்ள மக்கள் தமது அன்றாட அவலநிலைமையை எடுத்துக்கூறுவதற்கு செய்தியாளர் மாநாடொன்றைக் கூட்டவுள்ளனர்.

குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், அகதி முகாம்களிலும் பல வருடங்களாக அல்லறபடும் மக்களே தமது அவலங்களை வெளிப்படுத்த இந்தச் செய்தியாளர் மாநாட்டைக்கூட்ட உள்ளதாக அறியமுடிகிறது.

இந்த விடயம் தொடர்பாக இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளோர் சங்கத்தின் தலைவர் க.கணேசன் தெரிவித்ததாவது:-

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் போதிய குடிதண்ணீர் வசதியோ, சுகாதார வசதிகளோ இன்றியே நாம் வாழ்க்கையை நடத்தி வருகின்றோம்.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனத்தினர் எமது அவல நிலையைப் போக்குவர் என்ற நம்பிக்கை எமக்கு அற்றுவிட்டது. எமது அவல நிலையை வெளி உலகுக்கு எடுத்துக்காட்டும் சாத்வீகப் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட முற்பட்டால், வாக்குறுதிகளை அள்ளிவீசிப் போராட்டத்தைத் தணிக்கும் நடவடிக்கைகளிலேயே அரச அதிகாரிகள் ஈடுபடுகின்றனர்.

அண்மைக்காலத்தில் பெய்த மழையின்போது நாம் குடியிருக்கும் கொட்டில்கள் ஒழுகத் தொடங்கின.

இத்தகைய துன்ப நிலைமைகள் யாவற்றையும் வெளி உலகுக்கு எடுத்துக்காட்டி எமது வாழ்வியல் உரிமையை நிலைநாட்டுவதற்கும் எமது உண்மைநிலைமையை அனைத்து மக்களும் அறிந்துகொள்வதற்குமாக செய்தியாளர் மாநாடொன்றைக் கூட்டவுள்ளோம் - என்றார் அவர். (ஒ-86)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஜூன்11

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி.தென்மேற்குப் பகுதியில் உள்ள வீதிகள், வாய்க்கால்கள், மயானங்கள், என்பனவே சிரமதானம் மூலம் சீர்படுத்தப்பட உள்ளதாக வலி. தென்மேற்குப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இச்சிரமதான நடவடிக்கையின் கீழ் எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் பொன்னாலை வதியும், 15ஆம், 16ஆம் திகதி ல் டச்சு வீதியும் 18ஆம், 19ஆம் திகதிகளில் பிப்பிலி மயானமும், 20ஆம் திகதி பிப்பிலி புனித சேமக்காலையும் சிரமதானம் மூலம் சீரமைக்கப்படவுள்ளன.

மேலும் ஆனைக்கோட்டை அங்கையான் வாய்க்கால், நவாலி தெற்கு ஆராயம்பிட்டி இந்து மயானம் மற்றும் மயானப் பொதுக் கிணறு என்பனவும் சிரமதானம் மூலம் சீர்செய்யப்படவுள்ளன.

மேற்படி சிரமதானப் பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பினை அந்தந்தப் பகுதி மக்கள் வழங்கவேண்டுமென பிரதேச செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-185-ரி)

# பேச்சாற்றல் குறைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க குழு வருகிறது

யாழ்ப்பாணம், ஜூன்11

பேச்சாற்றல் குறைந்தவர்களுககு சிகிச்சை வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றவர்கள் அடங்கிய குழுவொன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது.

இக்குழு எதிர்வரும் 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் யாழ். செயலகத்துக்கு சமீபமாக உள்ள சாந்தியகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரையும் மாவட்டத்தில் உள்ள உளவளத் துணையாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கவுள்ளது. அத்துடன் பேச்சாற்றல் குறைந்தவர்களுக்கு பயிற்சிச் சிகிச்சைகளையும் இந்தக் குழுவினர் வழங்கவுள்ளனர்.

இக்குழுவினிடம் பேச்சுத்திறனுக்கான சிகிச்சை பெற விரும்புவோர் யாழ். போதனா வைத்தியசாலை, அறை இலக்கம் 30இல் இன்று தொடக்கம் நண்பகல் 12 மணிக்குப் பின்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். உளமருத்துவப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

பேச்சுத்திறன் அறவே அற்றவர்கள் இச்சிகிச்சையால் பயனடையமுடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-180)

# 69 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

கொழும்பு,ஜூன்11

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நீண்டகாலமாகப் பணியாற்றி வந்த 69 ஆசிரியர்களுக்கு அவர்கள் கோரிய இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களுக்கான இடமாற்றல் கடிதங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும்-

இவர்களுடைய இடங்களுக்கு கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்று வெளியேறியோர் புதிதாக நியமிக்கப்படவுள்ளதாகவும் -

தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-12)




'கியூடெக்' நிறுவனத்தின் போதை தவிர்ப்பு செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் போதையில் இருந்து மீண்ட ஒருவர் தனது அனுவபங்களைப் பகிர்ந்துகொள்வதையும் வண.பிதா சி.ஜி.ஜெயக்குமார், டாக்டர் அ.பிறற்ரோ டக்ளஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்:வலி. கிழக்கு செய்தியாளர்)*

## தனிப்பட்ட வேறுபாடுகளை மறந்து

# எமது இனத்துக்காகப் பாடுபட கலைஞர்கள் முன்வரவேண்டும்!

## நூல்வெளியீட்டு விழாவில் இளம்பரிதி உரை

யாழ்ப்பாணம்,ஜூன்11

தனிப்பட்ட வேறுபாடுகளை மறந்துவிட்டு எம் இனத்தின் விடுதலைக்காக கலைஞர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளமபரிதி. கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற வளவை வளவனின் 'தேசத்தின் பாடல்கள்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எழுத்தாளர் செம்பியன் செல்வன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சி.இளம்பரிதி தொடர்ந்து பேசியதாவது:-

மக்கள் மீது கொண்ட நேசத்தினால் போரிற்குள்ளும், போராட்டத்திற்குள்ளும், இருந்து ஆக்கங்களைப் பிரசவித்தவர் வளவை வளவன்.

இவர் ஒரு சமூக விடுதலைக்கான பேனாவாதியாக இருந்து விடுதலைக்கான ஊக்குவிப்பாளராகவும், உணர்வு ஊட்டலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

கலைஞர்கள் எமது போராட்டத்திற்கு வலுச்சேர்த்தவர்கள். கலைஞர்களுக்குள் பலதரப்பட்ட கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், அவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு இனத்துக்காக ஒன்றிணைந்து பாடுபடவேண்டியது அனைத்துக் கலைஞர்களினதும் கடமையாகும். நடந்து முடிந்த யுத்த நடவடிக்கைகள், சமாதானம் போன்றவற்றின் நினைவுகளை, பதிவேடுகளாகப் பேணிப் பாதுகாத்து அடுத்துவரும் சந்ததிக்கு கையளிப்பது கலைஞர்களின் கடமை.

இன்றைய அரசியலை எடுத்துக்கொண்டால் எமது இபக்கம் மக்களுக்காகவே போராட்டத்தை ஆரம்பித்தது. இந்த மண்ணில் மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக 17ஆயிரத்து 656போராளிகள் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். நாம் மக்களைப் பாதுகாக்கவே படை அணியை உருவாக்கினோம். எமது படை, பலம்பெற்றதால்தான் இன்று எல்லாமே நடக்கின்றது. நாம் சமாதானத்தை எதிர்ப்பவர்கள் அல்ல. ஆனால், எம்மை ஏமாற்ற நினைத்தால் ஏமாற்ற நினைப்பவரே ஏமாறுவார் - என்றார் அவர்.

இந்த நூல்வெளியீட்டு நிகழ்வில் நூலினை இளம்பரிதி வெளியிட்டார். முதற் பிரதியினை மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் கி.ஜி.ஜெயக்குமார் அடிகளார் பெற்றுக்கொண்டார். ஆய்வுரையினை, கவிஞர் சோ.பத்மநாதனும், கலாநிதி செ.திருநாவுக்கரசுவும், ஏற்புரையினை நூலாசிரியர் வளவை வளவனும நிகழ்த்தினர். (ஒ-180)

# சுகாதார சீர்கேடும், பாதிப்பும் குருநகர் பகுதியில் அதிகரிப்பு!

குருநகர்,ஜூன்11

குருநகர் பகுதியில் வசிப்போர் மிகவும் சிரமத்தை அனுபவிப்பதுடன சுகாதாரச் சீர்கேடுகளையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

குருநகர் புதிய கடற்கரை வீதி பொதுப்போக்குவரத்துக்கு படையினர் தடைவிதித்துள்ளனர். இதனால் சுமார் 200வீடுகளில் மக்கள் மீளக்குடியமர முடியாமல் உள்ளனர். இவர்கள் தமது உறவினர் வீடுகளிலேயே தொடர்ந்து வசித்து வருகிறார்கள். குருநகரில் உள்ள வீடுகள் மிகவும் குறுகியவை. ஒவ்வொரு வீட்டிலும் ஒன்றுக்கு மேறபட்ட குடும்பங்கள் வசித்து வருவது மிகுந்த சுகாதார சீர்கேடுகளை உருவாக்கி வருகின்றன.

மேலும், இவ்வீதித்தடை காரணமாக குடியிருப்புக்கு மத்தியிலேயே பலர் இறால் மற்றும் கடலட்டை பதனிடும் தொழிலையும் மேற்கொண்டு வருகிறார்கள். இவற்றைச் சுத்தப் படுத்தி கழிவுப்பொருள்களை கழிவுநீர் செல்லும் வடிகால்களில் இவர்கள் கொட்டி விடுகின்றனர். இதனால், கழிவுநீர் வடிந்தோட முடியாமல் உள்ளது. அத்துடன் துர்நாற்றம் வீசவும் இது காரணமாகின்றது.

மேலும் கடற்கரையில் இராணுவம் நிலைகொண்டிருப்பதனால் மீனவர்கள் தமது வலைகளை இவ் வீதியில் காயவைக்க முடியாதுள்ளது. இதனால், குருநகரில் மக்கள் குடியிருக்கும் குடியிருப்புக்களின் மத்தியில் உள்ள வீதிகளிலேயே மீனவர்கள் வலைகளைக் காயவைக்கின்றனர். அவ்வேளைகளில் வலைகளில் சிக்கியுள்ள செழும்புகளை வலைகளில் இருந்து அகற்றுவதற்காக அங்கேயே உதறுகின்றனர். அப்போது அழுக்குகளும், தூசியும் கலக்கின்றன. இதனால், காற்றுடன தடிமன், இருமல் போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உருவாகின்றது.

கடற்கரையில் தங்கியுள்ள படையினர் கழிவுநீர் செல்லும் வாய்க்கால்களின் குறுக்கே கடற்கரையோரத்தில் முட்கம்பிகளை வைத்துள்ளனா. இதனால் குப்பைகூளங்கள் இவ் வாய்க்கால்களில் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. இது நீரோட்டத்தையும் தடைசெய்து விடுகின்றது.

எனவே, மக்களது இயல்பான வாழ்க்கையை கருத்திற்கொண்டு படையினர் தமது செயற்பாடுகளை மாற்றிக்கொள்ள முன்வரவேண்டும் என பாதிப்படைந்துவரும் குருநகர் மக்கள் கோருகின்றனர். (ஒ-51)

# எங்களுக்குள் ஓர் அதிமானுடனாய் என்றென்றும் வாழும் பேராசிரியர்

**பேராசிரியர் அழகையா துரைராஜாவின் 9ஆவது நினைவு நாள் இன்றாகும்.**



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் அ.துரைராஜா என்ற அதிமானுடத்தின் தரிசனம் எமக்கு வாய்த்தது.

அவரது காலத்தில் வாழ்ந்தோம், அவரோடு இணைந்திருந்தோம்; வாழும்போதே அவர் மேன்மைகளை புரிந்திருந்தோம்; இன்றுவரை அவர் விட்ட பணிகளைத் தொடருகின்றோம்'- என்ற நினைவிலேயே நெஞ்சம் விரிகின்றது.

காலவெளியில் அவர் கலந்து ஆண்டுகள் 9 கடந்துவிட்டதாக அவரது நினைவுநாள் அறிவிப்பு சொல்கின்றது.

நெஞ்சமோ அர்த்தம் நிறைந்த எம் எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் அனைத்திலும் அவரின் வியாபகத்தினை என்றும் குன்றா உயிர்ப்புடன் காண்கின்றது.

அகமும் புறமும் அழகாய் இசைந்த மெய்மையே அவர் வாழ்வின் அழகாக ஒளிதந்தது.

எல்லையில்லாத அந்த அன்பு உள்ளத்தின் வெளிப்பாடான அந்த புன்னகை வண்ணமே, அதன் காட்சியானது.

இந்த அன்பு வித்தியாசமானது; தன்னைக் கடந்தது; தன் நாமம் கடந்தது; ஏன் தன் குடும்பவட்டத்தையும் கடந்து விரிந்தது. தன்னை உருவாக்கிய சமூகம் என்ற பெருங் குடும்பத்தின் பாற்பட்டது. இறுதிவரை ஊனினை உருக்கும் அந்த கொடிய நோயிடையும் உள்ளொளி பெருக்கி நின்றது.

வெறும் வாய்ச் சொல் வீரராக அல்லாமல் உழைப்பின் மகத்துவத்தை உணர்த்தியது பேராசிரியர் துரைராஜாவின் வாழ்வு. அவரின் ஆழ்ந்த ஆய்வின் கனியாக விளைந்த துரையின் கோட்பாடு (Thurai's Theory), அறிவியல் உலகில் இன்றும் புகழோடு வாழ்கின்றது. இந்த அறிவின் கனிகளை சமூகத்துக்காக்கி ஒரு சமூகப் பொறியாளனாகிய (Social Engineer) பான்மையிலேயே அவர் தம் வாழ்வின் முழுமை எய்தப்பட்டது.

**கலாநிதி என்.சண்முகலிங்கன்**
தலைவர், அரசறிவியல் - சமூகவியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

எத்தனை சமூக மேம்பாட்டு அமைப்புக்களின் 'ஊற்றுக்கண்ணாகவும்', அறிவு அரணாகவும் அவரின் பணிகள் பயன் விளைத்தன-

'எந்தரோ மகாநுபாவுலு -

அந்தரிக்கு வந்தனமு' - தியாகராஜ, கீர்த்தனையை வெறும் வாய்ப் பாடாகப் பாடிய என் நெஞ்சில், 'மகாநுபவர்' என்ற பதத்தின் மெய்ப் பொருளாய் என்றும் வாழும் அதிமானுடர் பேராசிரியர் அ.துரைராசா.

# வற்றாப்பளை ஆலயத்தை அமைச்சு புறக்கணிக்கிறது!

## பரிபாலன சபைத் தலைவர் வேதனை

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் இந்துகலாசார அமைச்சினால் புறக்கணிக்கப்படுவது எமக்கு வேதனை அளிக்கின்றது. இவ்வாறு தெரிவித்தார் மேற்படி ஆலய பரிபாலன சபைத் தலைவர்.


1987ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டுவரை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளினால் பெரும்பாதிப்பு களுக்குள்ளாகியது. ஆனால், இந்துசமயத்துக்கான அமைச்சுகள் இந்த ஆலயப் புனரமைப்புக்கு உதவி வழங்கவில்லை.

கடந்த அரசின்போது இந்துகலாசார அமைச்சு எமது ஆலயத்தின் புனரமைப்புக்கு எதுவித உதவியும் செய்யவில்லை. தற்போதைய அரசின் இந்துகலாசார அமைச்சும் எமது ஆலயத்தினை புறக்கணித்தே வருகிறது. நாம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டும் எவ்வித பயனும் ஏற்படவில்லை.

இலங்கையில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயமும் ஒன்றாகும். இந்த விடயம் இந்துகலாசார அமைச்சிற்குத் தெரியாமற்போனது வேதனையளிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY
11.06.2003



## செல்வன் பா.வேணுதாஸ்

தொல்புரத்தைச் சேர்ந்த **பாலச்சந்திரன் - ஸ்ரீதர்ஷினி** தம்பதிகளின்

தவப் புதல்வன் **வேணுதாஸ்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (11.06.2003) புதன்கிழமை பழமுதிர்ச் சோலை இல்லத்தில் மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பம்மா, லண்டன் தாஸ் மாமா, அவுஸ்திரேலியா அத்தை, கட்டார் இந்திரன் சித்தப்பா, வன்னி பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் அன்னை முத்துமாரி அம்மன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*தொல்புரம்.* (18934) தகவல்: குடும்பத்தினர்.

## 5ஆவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTHDAY
11-06-2003



இமையாணன் கிழக்கு, பிறவளவைச் சேர்ந்த **குலசிங்கம் - சந்திரா** தம்பதிகளின் செல்வப் புதல்விகள்

**செல்வி மதனிகா, செல்வி மௌனிகா**

இருவரும் தமது பிறந்தநாளை இன்று (11.06.2003) புதன்கிழமை சுவிஸில் உள்ள தமது இல்லத்தில் வெகுகுதூகலமாகக் கொண்டாடுகின்றனர். இவர்களை திடல் பத்திரகாளி அம்மன் துணைகொண்டு பல்லாண்டுகாலம் சீருஞ்சிறப்பும் பெற்று நலமாக வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*பிறவளவு,*
*இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.* (18959) - **த.ரதீஸ்வரன் (அண்ணா).**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| உதயம் | | அஸ்தமனம் |
|---|---|---|
| 1936 | | 2001 |
| - | | - |
| 01 | | 06 |
| - | | - |
| 31 | | 02 |



அமரர்
**சின்னத்தம்பி துரைச்சாமி**

*திதி: 11.06.2003 பூர்வபட்ஷ துவாதசி*

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
அழியாது உங்கள் நினைவு!
மண்ணுக்குள் சென்றாலும்
கண்ணுக்குள் வாழ்கின்றீர்!
நீங்காது உங்கள் நினைவு
நெஞ்சை விட்டு.
ஆயிரம் உறவுகள் இருந்தும் அப்பா
என்று அழைக்க ஓர் உறவு எமக்கில்லையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*துர்க்காபுரம்.*
*8ஆம் கட்டை.*
*மல்லாகம்.* (18941) **மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## விசர்நாய் கடித்து தடுப்பூசி ஏற்றாத நபர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்11

கடந்த இரு மாதங்களுக்கு முன் விசர்நாய்க் கடிக்கிலக்காகி அதற்குரிய ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றத்தவறிய ஒருவர் நீர்வெறுப்பு நோய்க்கு ஆளாகி உயிரிழந்துள்ளார்.

கோப்பாயைச் சேர்ந்த சின்னத்துரை சுந்தரலிங்கம் (வயது49) என்பவரே மரணமானவராவார்.

திடீரென ஏற்பட்ட மூச்சுத்திணறல், காய்ச்சல் ஆகியவற்றை அடுத்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதித்து 2ஆம் நாள் அங்கு அவர் உயிரிழந்தார்.

சடலம் விசாரணையையடுத்து உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ஓ-15)

## கூ.சங்கக் கிளை கொழும்புத்துறையில் மீண்டும் திறப்பு

கொழும்புத்துறை,ஜூன்11

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கொழும்புத்துறை கிழக்கு 21ஆம் இலக்கக் கிளை மீண்டும் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை கிழக்கு 3ஆம் குறுக்குத் தெருவில் இக்கிளை அமைந்துள்ளது. 2000ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது இக்கிளை சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-30)

## மாதகல் தவறணையை மீள இயக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்11

மாதகலில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையை மீளவும் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆய்வுசெய்து தமக்கு அறியத்தருமாறு பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் மானிப்பாய் பிரதேச சபையைக் கேட்டுள்ளார்.

மேற்படி கள்ளுத் தவறணை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால் சுமார் 25 சீவல் தொழிலாளர்கள் தமது அன்றாட வாழ்வை நடத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-185)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஜூன்11

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் மாணவர் உரை அரங்கம் இடம்பெறும்.

யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி மயூரி கந்தசாமி 'சைவ வாழ்வு' எனும் தலைப்பிலும், செல்வி தமயந்தி இரவீந்திரன் 'இந்துமதம் காட்டும் ஆன்மீகம்' என்னும் தலைப்பிலும், சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் குகதாசன் கோவர்த்தனன் 'இனிய தாளினினைப்பை இருபோதும்' என்னும் தலைப்பிலும், செல்வன் ஜெயகாந்தன் ஜெயதீஸ்வரன் 'குருவாய் வருவாய்' என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றுவர். (ஏ-173-36)

## திருமண வாழ்த்து

இன்று (11.06.2003) புதன்கிழமை
யாழ்.புனித யாகப்பர் ஆலயத்தில்
இல்லறவாழ்வில் இணையும்



**எலியானிஸ் - மேரி கல்பனா** தம்பதிகளின்
இல்லறவாழ்வு சிறப்புற அமைய இறைவன் அருள்வேண்டி
லண்டனில் வசிக்கும் தம்பி - அலோசியஸ் ஜெகன்,
தங்கை - செல்வறாஜினி, மைத்துனர் - அன்ரனி எட்வேட்,
மருமகள் - சகிலா ஆகியோர்
வாழ்க! வாழ்க!!வென வாழ்த்துகின்றனர்.

*159, குருசோ றோட், சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* தகவல்: அ.க.புஸ்பராஜா. (18796)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1937 | | 2003 |
| - | | - |
| 07 | | 05 |
| - | | - |
| 07 | | 12 |



**அமரர் மாரிமுத்து நவரத்தினம்**

*(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர்)*

எல்லாமே நீங்கள்தான் அப்பா - இவை
எல்லாமே நீங்கள்தான் அப்பா!
எண்ணாலோ எழுத்தாலோ விளக்கவியலாத இவை
எல்லாமே நீங்கள்தான் அப்பா!

இன்சொல்லும் புன்முறுவல் நிதம் பூத்த உம் முகமும்
இருதயத்தில் இருக்குதப்பா; இடம்பெயர மறுக்குதப்பா!
இப்போதும் நாம் கேட்கும் பாடல்கள் உம்குரலில்
எமை வந்து சேருதப்பா; எம் ஆவி சோருதப்பா!

கனவுகளை எம்மில் வளர்த்தீர்!
கவலையற எம்மை வளர்த்தீர்!
காலிடறும் வேளையெல்லாம் கைகொடுக்க அருகிருந்தீர்!
கண்ணீரினில் மூழ்குகிறோம்; கரையேற்றாதேன் பிரிந்தீர்?

நித்தமுமை நினைந்திருப்போம்!
நெஞ்சகத்தில் துதித்திருப்போம்!
இச்செகத்தில் இறுதிவரை
அச் சுகத்தால் உயிர் தரிப்போம்!

எங்கள் ஆருயிர்த் தந்தை எங்களை விட்டுப் பிரிந்த துயரச்செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல்கூறி, வேண்டிய உதவிகள் புரிந்த அருட்தந்தையர், அருட் சகோதரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*'நசரேத்', உடுவில்.* (18963) **மனைவி, பிள்ளைகள், மருமகள்.**


# MEDECINS SANS FRONTIERES
**(FRANCE)**
**மெடிசின்ஸ் சான்ஸ் (F)புரன்றியஸ் (பிரான்ஸ்)**

## அழைப்பு

அன்புடையீர்!

எமது நிறுவனத்தின் பிரியாவிடை விழா எதிர்வரும் (29.06.2003) ஞாயிறு காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது. தெமட்டக்கொட, பேஸ்லைன் வீதி, மவுன்ட்மேரி வரவேற்பு மண்டபத்தில் (ரயில்வே விளையாட்டு மைதானத்துக்கு முன்னால்) நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு எம்.எஸ்.எவ். (பிரான்ஸ்) இலங்கை நிறுவனத்தில் சேவையாற்றிய அனைத்து ஊழியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

☞ விழாவில் கலந்துகொள்வோர் எதிர்வரும் ஜூன் 15ஆம் திகதிக்கு முன் கொழும்பு தலைமைக் காரியாலயத்துடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொள்ளவும்.

**T.P. இல.: 01 691052, 01 693350, 01 679769.**

✪ அன்றைய தினம் ஊழியர்களுக்கு சேவைச் சான்றிதழ் வழங்கப்படும்.

**7, KYNSEY TERRACE,**
**COLOMBO - 08.** (சி-28297) **- நிறுவனத்தினர். M.S.F.**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில், பழைய பூங்கா வீதியில் 3பரப்புக் காணியும், சகல வசதிகளுடன் இரண்டு வீடுகளும், கடையும் உடனடி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும் மராஜலக்ஷ்மி, 132, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.(18980)

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி ஒழுங்கையில் 8பரப்புக் காணி வீடுவளவுடன், பயன்தரும் மரங்களுடன், சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் தொடர்புகொள்ளளாம். F.X. நீக்கலஸ், கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை (யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் பின்ஒழுங்கை). (18964)

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட தற்போது பாவனையிலுள்ள புதிய CANON - 1215 போட்டோ பிரதி இயந்திரம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 077 6079254, 0777 154586. (18994)

## இறைச்சிக்கோழி

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன்சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (18992)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அழகான, 3 இன தடுப்பு ஊசி போடப்பட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை, நல்லூர். (18993)

## பந்தல் விற்பனைக்கு

தகரப்பந்தல், மணவறை என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- சற்குருநாதன், 8/1, பெருமாள் கோவிலடி வீதி, யாழ்ப்பாணம். (18971)

## தவறிவிட்டது

சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் ஆலய அர்ச்சகரின் 1½ பவுண் நிறையுடைய கைச்சங்கிலி 08.06.2003 ஞாயிற்றுக்கிழமை மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்திலோ அல்லது ஆலயத்திற்கும் அடைக்கலநதோட்டம கந்தசுவாமி கோவிலுக்குமிடையிலோ தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் ஒப்படைக்கவும்.(18986)

## தேவை

லண்டன் A/L பயிலுகின்ற மாணவிக்கு Business maths & Statistics Accounting ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர்/ஆசிரியை தேவை. தொடர்பு:- T.P.No. 021-222 2478 (18995)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அமெரிக்காவில் தொழில்புரியும், 29வயதுடைய, 4இல செவ்வாய், கிரகபாவம் 21 உடைய வருக்கு ஆங்கில அறிவுடைய, அழகான மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக்குறிப்பு குடும்ப விவரத்துடன் தொடர்புகொள்ளவும். விள.இல. 1924, மே/பா உதயன்.

(18999)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 34 வயதுடைய, அரச வங்கியில் கடமையாற்றும் மகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.1923, மே/பா. உதயன்.

(18988)

## திருமணசேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்புரியும் மணமகன்களுக்கு A/L படித்த அல்லது பட்டதாரி மணமகள்கள் தேவை. படம், ஜாதகம் என்பவற்றுடன் நேரடியாக உடன் தொடர்புகொள்ளவும். தபால் மூலம் வரும் ஜாதகங்கள் ஏற்கப்படமாட்டாது. தொடர்பு:- லலிதா திருமண சேவை, N.கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(18967)

## காணவில்லை

பொன்னையா சந்திரதாஸ் என்பவரது ஹூமாலா சைக்கிள் (ஆண்களுக்கானது - 56C81469) விக்னா கல்விநிலையத்துக்கு முன்பாக 08.06.2003 ஞாயிற்றுக்கிழமை காணாமற்போய்விட்டது. இதுபற்றி தகவல்தெரிந்தவர்கள் விக்னா கல்வி நிலையத்துடன் தொடர்புகொள்ளவும்.

(18961)



ஊர்காவற்றுறை புளியங்கூடல்
செருத்தனைப்பதி
ஸ்ரீமகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

### வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்-2003

**நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ**
**தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லா**
**மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்**
**குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே!**

அம்பிகை அடியார்களே!

நிகழும் சுபானு வருஷம் வைகாசித்திங்கள் 28 ஆம் நாள் இன்று (11.06.2003) புதன்கிழமை காலை 7.00மணிக்கு கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம். 12.06.2003 வியாழக்கிழமை காயத்திரி ஹோமம், சமயதீட்சை மாலை கொடியேற்றத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நடைபெற்று மறுநாள் வைகாசித் திங்கள் 30ஆம் நாள் 13-06-2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகும்.

ஆனித்திங்கள் 6ஆம் நாள் 21.06.2003 சனிக்கிழமை
காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழா
22.06.2003 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா

அம்பிகையின் அரும்பணியில:

செருத்தனைப்பதி,
புளியங்கூடல்.
(18987)

து.சிவஞானச்செல்வம்,
மேற்படி ஆலயஅறங்காவலர்.

# பாலைவனச் சோலை ஊழியம் நடத்தும்

# இயேசுவின் இன்பப் பெருவிழா



| இடம்: | திகதி | நேரம்: |
|---|---|---|
| மானிப்பாய் செல்லமுத்து மைதானம் | ஆனி (ஜுன்) மாதம் 12,13,14,15 | பிற்பகல் 4.30 மணி |

தேவ செய்தியாளர்:

## சகோதரி பத்மா முதலியார்

(சென்னை, இந்தியா)

சிறப்புப் பாடல்கள்
சகோ.ஜான்ஜேபேஸ & குழுவினர்

பாவம், வியாதி, பில்லி சூனியம், கடன்பாரம் இவைகளிலிருந்து உடனே விடுதலை பெற குடும்பமாக வாருங்கள்!

கூட்ட முடிவில் ஜெப எண்ணெய் இலவசமாய் வழங்கப்படும்

குறிப்பு: ஆனி(ஜுன்) மாதம் 13,14 காலை 9.30 மணிக்கு
மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில்
ஊழியர்கள், விசுவாசிகளுக்கான வேதபடிப்பு நடைபெறும்.

இயேசு இன்றும் அற்புதம் செய்கிறார்!

அனுமதி இலவசம்!!

தொடர்பு: யாழ்.குடா ஊழியர் ஐக்கியம்
T.P.: 222 3653, 222 2930, 222 3286

(18721)

உ
மஞ்ச முருகன் துணை

## மஞ்சவனப்பதி ஐயா ஜோதிஷம்

மஞ்ச முருகன் திருவருள் பாலிக்க, மங்கள காரியம், முகூர்த்தம், விவாகப் பொருத்தம், ஜாதகபலன், கிரகப்பிரீதி, தோஷ நிவாரண விளக்க விவரணங்கள் மற்றும் குறிப்புகள் தொடர்பான விடயங்களுக்கும் பிறவற்றுக்கும்........
தொடர்பு கொள்க.

**வை.சுப்பிரமணியக் குருக்கள் (கணேச ஐயா)**
மஞ்சவனப்பதி சேனிக்கருகில்,- கொக்குவில்.
தொ.பே. 021 2226143

சுபானு வருடம் வைகாசி மாதம் 28ஆம் திகதி (11.06.2003) புதன்கிழமை மங்கள அதிபிடம் முதல் 10 மணி 21 நிமிடம் வரையுள்ள சுப முகூர்த்தத்தில் திருவருளுடனும் பெரியோர் ஆசிகளுடனும் ஆரம்பம்.

தினமும் காலை 7மணி முதல் 11.30 மணி வரை. (18978)

## கண்ணீர் அஞ்சலி

எமது உறவினரும்
திரு. ந. சிவகுமாரன்
(ஆசிரியர், முருகரி மகாவித்தியாலயம்)
அவர்களின் அன்புத் தந்தையாருமாகிய

### ஆழ்வாப்பிள்ளை தர்மலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

215, அண்டர்சன் தொடர்மாடி,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு-05.

திரு.க.சரவணமுத்துவும்,
குடும்பத்தினரும்.

(சி 28341)

உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ:

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் வைகாசித் திங்கள் 28ஆம் நாள் இன்று (11.06.2003) புதன்கிழமை பிற்பகல் 01.29 மணிமுதல் 02.17 மணி வரையுள்ள சித்தயோகமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

திருமதி பொன்னுத்துரை தம்பதிகளின்
செல்வப்புதல்வன்
திருவளர் செல்வன்



**சிவகுமார்**

அவர்களுக்கும்





திரு. திருமதி சி. விநாயகமூர்த்தி தம்பதிகளின்
செல்வப்புதல்வி
திருவளர் செல்வி



**சூரியமாலா**

அவர்களுக்கும்

திருமணம் இனிதே நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

முக்கிய குறிப்பு: திருமாங்கல்யதாரண வைபவம் தனிப்பட்ட அழைப்பிதழில் குறிப்பிட்டபடி அல்லாது மணமகள் இல்லத்தில் இருந்து இடம்மாற்றம் செய்யப்பட்டு கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள திரு.மா.அன்னலிங்கம் (ச.செல்லையா) அவர்களின் இல்லத்தில் நடைபெறுகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

தயவுசெய்து இந்த இடம்மாற்ற அறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்று, குடும்பசகிதம் வருகைதந்து புதுமணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்தி மகிழும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி ம.பொன்னுத்துரை,
காளிகோவிலடி, சங்கானை.

திரு.திருமதி விநாயகமூர்த்தி,
மடத்தடி வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

(18955) (இரு வீட்டார் அழைப்பு)

உ
சிவமயம்



# நல்லூர் தெற்கு ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தானம்

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

## 11.06.2003 புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு

**நிகழும் சுபாநு வருஷம் வைகாசி மாதம் 28ஆம் திகதி (11.06.2003) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு துவாதசி திதியும், சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீகற்பக விநாயகப் பெருமானுக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் இவ்வெள்ளோட்ட விழாவில் பங்குபற்றி விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றேகும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.**

## நிகழ்ச்சிகள்

* தேவாரம்
* தலைமையுரை: திரு.சி.வெள்ளியம்பலம் - தலைவர், ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை
* சிறப்புரை:
  1. திரு.சு.செந்தில்நாதன் - தர்மகர்த்தா, அராலி அம்மன் ஆலயம்
  2. திரு.க.ஜெயரத்தினம் - இளைப்பாறிய அதிபர், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி
  3. ந.யோகறாஜன் - அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்
  4. வை.சத்தியநாதன் - போதனாசிரியர், தொழில்நுட்பக் கல்லூரி
* பாராட்டுரை: திரு.சி.அமரசிங்கம் - சிற்பகலாமேதை, சித்திரத்தேர் ஸ்தபதி, அராலி
* கலைஞர் கௌரவிப்பு: சித்திரத்தேரை வடிவமைத்த திருநெல்வேலி இராசதுரை பிரபாகரன் (பிரான்) அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தல்
  - ☐ தேரை நிர்மாணித்த குழுவினருக்கான கௌரவிப்பு
  - ☐ வர்ணவேலை பாஸ்கரன் குழுவினர் - திருநெல்வேலி
* நன்றியுரை:

தேர் நிர்மாணிப்புக் குழு,
நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர், தேவஸ்தானம்.

**13-06-2003 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பஞ்சமுக விநாயகப் பெருமான் சித்திரதேரில் ஆரோகணித்து வீதி வலம்வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்**

### ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்திகள்

எல்லாம்வல்ல கற்பக விநாயகர் திருவருளை முன்னிட்டு, சித்திரத் தேரானது மிகவும் சீருஞ்சிறப்பாக, பார்க்க மிகவும் சந்தோசமாக புனிதத் தன்மை வாய்ந்ததாக அமைந்திருக்கிறது. இந்தத் தேரானது பிரம்மா, விஸ்ணு, ருத்ரன், சதாசிவம், சாந்தா போன்ற ஐந்து பூதங்களைக் கொண்டது. இத்தேர்முடி மிகவும் உன்னதமானது. அதில் 'கலசம்' அதியுயர்ந்தது. தேர் மிக அழகாகவும் பல வர்ணங்களைக் கொண்டதுமானது. இந்தத் தேர் நான்கு வர்ணங்களால் சூழப்பட்டது. இந்தத் தேரை உருவாக்கிய சிற்பாசாரியர்களுக்கு எல்லாம்வல்ல கற்பக விநாயகப் பெருமான் திருவருளும், குருவருளும் கிடைக்கப்பெற ஆசி கூறி அமைகின்றேன்.

கிரியா திலகம்
சிவப்பிரம்மஸ்ரீ ச.சிவசாமிக்குருக்கள்
மஹோற்சவ பிரதம குரு,
நல்லூர் தெற்கு,
ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**நல்லூர் தெற்கு**
**ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்**
**தேர்த் திருவிழா**
**சுபானு வருடம் வைகாசி 30ஆம் திகதி**
**(13.06.2003) வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| காலை 5.00 மணி | - உஷா பூசை |
| 5.30 மணி | - அபிஷேகம் |
| 6.30 மணி | - தம்பப் பூசை |
| 7.00 மணி | - வசந்த மண்டபப் பூசை |
| 8.30 மணி | - பஞ்சமுக விநாயகர் பெருமான் தேரில் ஆரோகணித்தல் |
| 9.30 மணி | - தேர் இருப்பிடத்தில் அர்ச்சனை |
| 10.30 மணி | - எம்பெருமான் தேரிலிருந்து அவரோகணித்தல் |
| 11.30 மணி | - பிராயச்சித்த அபிஷேகம் |
| மாலை 5.00 மணி | - சாயரட்சைப் பூசை |
| 5.30 மணி | - தம்பப் பூசை |
| 6.00 மணி | - வசந்தமண்டபப் பூசை |

- தொடர்ந்து சுவாமி வீதி வலம் வருவார்.

வெள்ளோட்ட விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.
தேர்த்திருவிழா உபயகாரர்.

### அருள்வாய் போற்றி

*நலம் சிறந்த யாழ்ப்பாண நல்லூர் தன்னில்*
*நவமணித்தேர் ஏறிவரும் கணேசா, தேவ*
*குலம்சிறந்த பணியாற்றும் வண்ணக்கோயில்*
*குளிர்ந்தமர்ந்த கற்பகவி நாயகா, நின்*
*தலம் சிறந்த தொண்டடியார் சுகம்சிறக்க*
*தமிழ்சிறக்க சைவநெறி வளம்சிறக்க*
*நிலம்சிறக்க நிதிசிறக்கக் கலைசிறக்க*
*நின் கருணை விழிநோக்கி அருள்வாய் போற்றி.*

*இசைபெருகு சுபானுவை காசிமாதம்*
*இருபத்தெட் டில்புதன் சுவாதி நாளில்*
*திசைபெருக வெள்ளோட்டம் கொள்ளும் செல்வா,*
*தேரமைத்தோர், பணிபுரிந்தோர், அடியார் தொண்டர்*
*பசியவன் பையுரிந்தோர், பணம் கொடுத்தோர்*
*பல்புவிகு சுகம்பெருக, மனங்குளிர்ந்து*
*அசைவிலா நின்பாதத் தேன்சுவிக்க*
*ஆனைக்கற் பகமேநின் (று) அருள்வாய் போற்றி*

- அருட்கவி.சீ. விநாசித்தம்பி M.A.

### ஆலய பரிபாலன சபைத் தலைவரின் ஆசிச் செய்தி

எல்லாம்வல்ல எம் விநாயகப் பெருமான் திருவருளால் எமது ஆலயத்துக்கு அழகிய சித்திரத்தேர் அமைக்கப்பெற்றதையிட்டு பூரிப்படைகிறேன். இத்தேரினைச் சிறப்புற ஆக்கித்தந்த சிற்பாசாரியர்களுக்கும், வர்ணக்கலைஞர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினையும் வாழ்த்தையும் தெரிவிப்பதுடன் அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப்பெற விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

எமது தேர் திருப்பணியானது 1995ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோதும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழல் காரணமாக இடையில் தடைப்பட்டு, எமது நிர்மாணிப்புக் குழுவினரின் அயராத உழைப்பினாலும் அர்ப்பணிப்பினாலும் இன்று இத்தேர் முழுமைபெற்று வெள்ளோட்டம் காணுவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

இத்தேர் நிர்மாணிப்புப் பணிக்குப் பங்களிப்பு வழங்கிய அடியார்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பெறப்பிரார்த்திக்கிறேன்.

சி.வெள்ளியம்பலம்,
தலைவர், ஆலய பரிபாலன சபை.


விழா சிறப்புற வாழ்த்துவோர்:

**உஷா ஏஜென்சி**
145, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

**லிட்டில் இந்தியன் பெஷன்**
77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

**காவேரி சில்க்ஸ்**
48, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

**புஸ்பா ஸ்ரோர்ஸ்**
192, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

**ரவி வீடியோ சென்ரர், அன் தொலைத்தொடர்பு சேவை**
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

**ரவீந்திரன் சலவைத் தொழிற்சாலை**
114, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூ லக்ஸன் சலூன்**
112, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**கஜா போட்டோ அன் வீடியோ**
36, பாரதி வீதி,
யாழ்ப்பாணம்.

**P.S. சேவிஸ் ஸ்ரேசன்**
257/1,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**நாதன் தச்சுத் தொழிற்சாலை**
நீக்கலஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
(தலம் கடை),
முதலியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**அம்பாள் கபே**
முத்திரைச் சந்தையடி,
நல்லூர்.
உரிமையாளர்: ராசன்.

**தர்ம்சன்ஸ்**
அரியாலை.

(9603)

**ஆறுமுகம் விற்பனை நிலையம்**
மாம்பழம் சந்தி,
அரியாலை.

**திலக்ஷனா கட்டடப் பொருள் விற்பனை நிலையம்**
177, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.